அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page No. — —

மலர் 4 இதழ் 1 விலை அ.4	நந்தன ஸு சித்திரை மீ ஏப்ரல்—மே—1952	வருட சந்தா ரூ. 2-4-0

18581



வாழ்க்கையைக் கைக்கொள்ள இந்திரனுக்கு
பிரஹஸ்பதி உபதேசித்தல்

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—35)

பொருளடக்கம்

			பக்கம்
1.	பாத்திரமும் பொருளும்	(திருப்புகழ்மணி) ...	1
2.	கந்தன ஆண்டு வாழ்த்து	...	7
3.	திருத்தணிகை	(ரா. பி. சேதுப் பிள்ளை) ...	7
4.	கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்) ...	8
5.	வருஷ வாழ்த்துப் பாடல்	(கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை) ...	13
6.	குறுகைக் கவிஞர்	(ரசபதி) ...	14
7.	சேக்கிழார் செய்தது	(இளவழகனார்) ...	24
8.	திருவருட்பா ஆசிரியர் வரலாறு	(மொ. அ. துரை அரங்கசாமி) ...	28
9.	அதிசயம் அநேகமுற்ற பழநி	(சே. தா. இராமலிங்கம்பிள்ளை) ...	3[illegible]
10.	வைத்தியநாதன்	(கவியரசு வித்வான் கு. நடேச கவுண்டர்) ...	41
11.	Bhakti - The Royal Road	(Thiruppugal Mani) ...	46

கர வருஷ பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணு 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்புவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா ரூ 2—4—0
நான்கு வருட சந்தா ரூ. 8—4—0
முன்னதாகச் சந்தா அனுப்புகிறவர்களுக்குமட்டும் பத்திரிகை அனுப்பப்படும்
அயல் நாடுகளுக்கு வருடசந்தா ரூ. 3—0—0.
4 வருட சந்தா ரூ. 11—0—0.
முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.
அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

ஸ்ரீ அருணகிரிநாதர் 'திருப்புகழ் மாலை'	(160 பாடல்)	0—8—0
பாராயணத் தோத்திரத் திரட்டு		0—1—6
கம்பர் தமிழ் அகராதி	(940பக்கம்)	7—12—0
	செலவுடன்	8—9—0
கந்தர் அநுபூதி	(ரசபதி அவர்கள் உரையுடன்)	1—0—0

கிடைக்குமிடம்: அமிர்தவசனி காரியாலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: [illegible]

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!

மலர் 4	நந்தன ஞு சித்திரை மீ ஏப்ரல்—மே—1952	இதழ் 1

பாத்திரமும் பொருளும்

திருப்புகழ்மணி

பாத்திரத்தில் அடங்கக் காண்பது பொருள். பொருளால் செய்யப் பட்டது பாத்திரம். பாத்திரத்தை தாங்குவதும் பொருள்தான். உடல் என்பது ஒரு பாத்திரம். உயிரோ அடங்கும் பொருள்; உள்ளம் ஒரு பாத்திரந்தான். அனுபூதி என்பது அடங்கும் பொருள். இசை, சங்கீதம் என்பது ஒரு பாத்திரம். பாடல் என்பது அடங்கும் பொருள். அதனால்தான், இசையெனும் பாத்திரத்தின் அழகை அதிகமாய் இழுத்துக் காட்டாது, இசைந்த பொருளின் மகிமையை, பாடலை, தொண்டர்கள் அதிகமாய் நாடுவதும். அறிவும் ஒரு பாத்திரம்தான். ஞானம் என்பது அடங்கும் பொருள். ஏழைகள் நல்ல பாத்திரம். கொடை என்பது அடங்கும் பொருள்.

நீர்பூத்த வேணி நிலவெறிப்ப, மன்றுடுங்
கார்பூத்த கண்டனையான் காணுநா ளெந்நாளோ?

உண்மை யொன்றை ஓர்கிலீர்'' என்று பாடியுள்ளார். ஆகவே, ஜாதி குலங்களெல்லாம் அவர்கள் கடமையையும் அவரவர்கள் கட்டுப்படவேண்டிய ஆசாரங்களையும் சுட்டிக் காட்டும். தன்னை விட்டு வெளியில் பார்வை ஓடினல், பார்வையெலாம் பொருளிலே இருக்க வேண்டு மல்லாது, பொருளற்ற பாத்திரத்திலே நிற்பது அழகல்ல; ஆற்றலல்ல. அவரவர்கள் தங்கள் கர்மங்களையும், கடன்களையும் தெரிந்துகொள்ள, தங்கள் ஜாதி குலம் இவைகளை நாட வேண்டுமே யல்லாது, உலகத்தவரை நாடி நிற்கும் வேளையில், பொருளைப் பார் என்று உபதேசித்தார். எந்தப் பாம்பு எந்தப் புற்றில் இருக்கும் என்று யார்தான் முன்னதாகத் தீர்மானிக்க முடியும். ஆடம்பர அங்கங்களுடன் ஊர் கூட்டி அமர்க்களம் செய்யும் பெருமக்கள் உள்ளத்துள் நிற்கும் சைதன்யம், வெகு சாதாரண பான்மை நிறைந்து, கல்யாண சமத்வ நல்லொழுக்கங்கள் அற்ற ஜீவனய் இருக்கலாம். எவரும் அறியாமல் நம்முள் நண்பரோடு நண்பராய் உலவி வரும் ஓர் உருவம், தெய்வீக சைதன்யம் வாய்ந்ததாகவும் இருக்கலாம். ஆகவே பொருளைப் பார்; உருவைக் கண்டு திகைக்காதே என்றூர்கள் பெரியோர்கள். மற்றும் ஓர் உபதேசம். பாத்திரத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தால், பொருள் தானே பாத்திரத்தில் வந்து அடங்கி நிற்கும் உண்மையைக் காணலாம். பாத்திர சுத்தியை எப்படிப் பெறுவது?

பச்சைநிற மாய்ச், சிவந்த பாகங் கலந்து, உலகை
பிச்சையுட னின்றுளை யாங்காண்ப தெந்நாளோ?

" காவியுடுத்தும் தாழ்சடைவைத்தும் காடுகள்புக்குந் தடுமாறி
காய்கனி துய்த்தும் காயமொறுத்தும் காசினிமுற்றுந்திரியாதே
ஜீவனொடுக்கம் பூதவொடுக்கம் தேறவுதிக்கும் பரஞான
தீபவிளக்கம் காண எனக்குன் சீதளபத்மம் தருவாயே!"

என்றார் அருணகிரி.

"ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ச பாஹ்யா
அப்யந்தரஸ் ஸுசிஹி"

பகவானை நினைத்த உள்ளம் சுத்தமென்றும், நினையாது நின்ற உள்ளம் அசுத்த மென்றும் வேதம் கூறுகின்றது. பகவான் நாமத்தை ஸ்மரணம் செய்துகொண்டு இருக்கும் மேன் மக்கள் சுத்த ப்ரசித்தர்கள். தாழ்மை யெனும் தவம் பொருளாய் விளங்கும் மேன்மை பெற்ற நாமம் உரைக்கும் மேன் மக்கள் எனும் பாத்திரங்களில்.

பாத்திரங்களை ஒரு குச்சி கொண்டு தட்டிப் பார்த்து, பாத்திரம் சரியாய் இருக்கிறதா அல்லது விரிந்து உடைந்து இருக்கின்றதா என்று பார்ப்பது உண்டு. மானிட தேகமாகிய பாத்திரத்தை, நாவு என்ற குச்சியால் தட்டிப் பார். சப்தம் ராமா, கிருஷ்ணா, முருகாவென்று ஆண்டவன் நாம சப்தங்கள் ஏற்பட்டால், பாத்திரம் நல்ல பாத்திரம் என்று உணர். அந்த சம்பவங்க ளின்றி வேறு சப்தங்கள் ஏற்பட்டாலோ, அது உடைந்த பாத்திரமென்று கருதி, கருமானிடம் அனுப்பி, வேகும் தீயிலிட்டு பற்றவைத்து, விரிசலை யெல்லாம் ஊதி மறுபடியும்

ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடி வாமடியைப் போற்றுநா ளெந்நாளோ ?

ஒன்றாக்கி விடுவான் பிரம்மா. அந்த அவஸ்தை யைத் தான் விதி விதியென்று சொல்வார்கள். முருகன் விதியாய் கதியாய் வருவான் என்பர் அருணகிரி.

விரிசல்களாய தேக பாத்திரங்களை விதியெனும் தீவைத் தூதி, கதியெனும் ஆனந்த நிலையில் ஏற்றிடு வான் ஆதலால், 'விதியாய் கதியாய்' என்று முருக னைப் பாடினார். பாத்திரத்திற்கு உத்தரணி என்று ஒன்றுண்டு, பாத்திரத்தில் காணும் பொருளை கொஞ் சம் கொஞ்சமாய் எடுத்து உதவவும் அனுபவிக்கவும். தேகப் பாத்திரத்திற்கு நாவுதான் உத்தரணியாய் நிற்பதால், அருணகிரியார் பாடுவதும் முருகா முருகாவென்றுதான்.

"நாமேல் நடவீர் நடவீர் இனியே' என்றார். ஞானசம்ப மூர்த்தியும் அஃதே உபதேசம் செய்தார். "தலை நாளும் பூசுமந்து, நா நாமம் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"

பூரணமாய் நிற்கும் முருக சப்தப் பொருளை ஒரே முறையில் நாவால் அளந்துண்ண முடியாத தால், நாவெனும் உத்தரணி கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து எடுத்து முருகா முருகா என்று தொண்டர்கள் அனுபவிக்கின்றார்கள். கந்தரலங் காரத்தில் இதை அருணகிரி விளக்குவதும் அற்புதம். 'தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டு' களிக்கும் பங்கயப் புண்டரிகம் எப்போது தருவாய்

அஞ்சுமுகங் காட்டாமல், ஆறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ ?

என்று வினவுகிறார். ஆதலால், பொருள் நிறைந்த பாத்திரங்களாய் எங்களை நிரப்பி ஏற்று ஆண்டருள்வாய் என்பது தான், தொண்டர்கள் செய்யும் பிரார்த்தனை போலும்!

நந்தன ஆண்டு வாழ்த்து

தர்ம்மையும் தூய்மையும் சாலவும் வளர்க!
வான் பொய்க்காமல் மழையை வழங்குக!
உணவும் உடையும் குறைவின்றி உதவுக!
எங்கும் அமைதி எழுக!
சொல்லும் செயலும் ஒன்றுக!
பரமன் வழிபாடு எங்கும் பரவுக!
நந்தன ஆண்டு கந்தனதருளால்
நந்தலில் வளனெலாம் நல்கிடுமாக!

திருத்தணிகை

ரா. பி. சேதுப்பிள்ளை

"ஆறுவது சினம்" என்பது பள்ளிச் சிறுவர் படிக்கும் பாடம். அதை ஆறிலும் படிக்கலாம்; அறுபதிலும் படிக்கலாம். அறிவிற்கு ஏற்ற பொருள் சுரக்கும் அருமையான வாசகம் அது.

சினம் என்பது நெருப்பு; அது சேர்ந்தாரைக் கொல்லி என்றார் திருவள்ளுவர்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்."

என்பது வள்ளுவர் வாக்கு. சினத்தை வளர விட்டால் கேடு வரும்; அடக்கி விட்டால் நலம் விளையும்.

சுக்கிலமும், நீருஞ், சொரிமலமு நாறுமுடற்
புக்குழலும் வாஞ்சையினிப் போதுமென்ப தெந்நாளோ ?

சினம் தணிய மருந்து உண்டு. திருத்தணிகையிலே உள்ளது அம் மருந்து என்று பாரதியார் பாடுகின்றார். திருத்தணிகை என்பது இங்கு பொறுமையின் பேர்.

"திருத்தணிகை மலைமேலே குமரதேவன்
திருக்கொலுவீற்றிருக்கு மதன் பொருளைக் கேளீர்!
செந்தமிழ் கண்டீர்; பகுதி 'தணி' எனும் சொல்"

என்று பொருளாக்கமும் சொல்லாக்கமும் தருகின்றார் கவிஞர். பொறுமையின் அறிகுறியாக நிற்பது தணிகை. தணிவது சினம் என்று உணர்த்துவது தணிகை மலை.

இன்று பிறக்கின்ற ஆண்டிலே உள்ளத்தில் சினம் பற்றுதற் கேற்ற சின்னங்கள் இருக்கின்றன. பருக நீர் இல்லை; உண்ண உணவில்லை; உள்ளத்தில் உண்மை யில்லை; வாயில் தூய்மையில்லை; ஒன்றும் சரியில்லை என்று குறை கூறிச் சீற்றங் கொள்ள வேண்டாம். திருத்தணிகை என்னும் மலை யுண்டு; அங்கே பொறுமை என்னும் குண முண்டு; பெருமை சான்ற முருகனுண்டு. "அவன் கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உறுதியோடு புதிய ஆண்டை வாழ்த்துவோம்! வரவேற்போம்!!

கதிர்காம யாத்திரை

கி. வா. ஜகந்நாதன்

மூன்றும் மலர் 381-ஆம் பக்கத் தொடர்ச்சி

கதிர்காமத்தில் சந்நிதி வீதிக்கு வந்திருக்கிறோம் என்ற நினைவிலே இன்பம் உண்டாயிற்று. எல்லா வசதிகளும் அமைய, வேகமான காரில் வந்த எங்களுக்கே இந்த உணர்ச்சி ஏற்பட்டால், பல காலமாகக் கதிர்காம தரிசனம் செய்யவேண்டு மென்று

நீர்க்குமிழி பூனமைத்து நின்றுழு நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ ?

எண்ணி எண்ணி முயன்று, வேண்டிய வசதிகளைச் செய்து கொண்டு காலால் நடந்து வரும் அன்பர்களுக்கு உண்டாகும் அநுபவத்தை என்னவென்று சொல்வது! பசிக்கப் பசிக்க உணவுக்கு ருசி அதிகமாகிறது. நாட்பட நாட்படப் பிறக்கும் குழந்தையின் அருமை மிகுதியாகிறது. பலநாள் பிரிந்து, காணவில்லையே என்ற ஏக்கம் மிக மிகப் பின்னுலே அமையும் கூட்டுறவிலே ஆனந்தம் எல்லையற்ற தாகிறது. அப்படியே இறைவன் எழுந்தருளியிருக்கும் தலம் எவ்வளவுக்கு எவ்வளவு அடைய அரியதாக இருக்கிறதோ, அவ்வளவு அதன்பால் மதிப்பும், தரிசனத்தின்போது உணர்ச்சியும் மிகுதியாகின்றன. மலை மேலே கோயில்களைக் கட்டிப் பிரார்த்தனை செலுத்த அங்கே போக வைத்த பெரியோர்கள், மனிதனுடைய மன இயல்பை எவ்வளவு நுட்பமாக உணர்ந்திருக்கிருர்கள்! வருத்தமின்றிக் கிடைக்கும் பொருளில் மனிதனுக்கு அருமைப்பாடு பிறப்பதில்லை.

கடல் கடந்து நாடு கடந்து காடு கடந்து கதிர்காம வேலனைத் தரிசிக்க வந்த பழங்கால அன்பர்களுக்கு நிச்சயமாக அதிகமான இன்ப உணர்ச்சி ஏற்பட்டுத்தான் இருக்கும். மனசிலே அன்பு முதிர்ந்தவர்களுக்கு ஆண்டவனை எங்கே கண்டாலும் நெஞ்சு நெகிழும். அத்தகையவர்களுக்கு எல்லாப் பொருளிலும் இறைவனைக் கண்டு உருகும் ஆற்றல் இருக்கும். கனத்த கல்லாகிய நெஞ்சை யுடையவர்களுக்கு அந்தக் கல் நெகிழ்ந்து கசிந்து கரைந்து உருக வேண்டுமே! அதற்காகத்தான் இப்படியெல்லாம் அலைந்து திரிந்து தேடிக் கண்டுபிடித்தால், தலங்களிடம் மதிப்பு ஏற்படுமென்று ஆன்றேர்கள் கருதியிருக்க வேண்டும்.

கதிர்காமத்தில் பல தெருக்கள் இல்லை. சந்நிதி வீதி ஒன்றுதான் பெரியது. வேறு ஒன்றிரண்டு சிறிய வீதிகள் இருக்கின்றன. கதிர்காமம் ஓர் ஊர் அல்ல; மக்கள் வாழும் ஊர் அல்ல. அது கோயிலும் மடங்களும் உள்ள தலம். வீதிகள் முழுவதும் மடங்களும் சத்திரங்களுமாக இருக்கின்றன. தல யாத்திரையாக வரும் ஜனங்களுக்கு வேண்டிய பொருளை வியாபாரம்

ஐம்பூதத் தாலே யலக்கழிந்த தோஷமற
வெம்பூத நாதனரு ளெய்துநா ளெந்நாளோ ?

செய்யச் சில சிறு கடைகள் இருக்கின்றன. நாங்கள் சென்ற காலம் எந்தவிதமான உற்சவமும் இல்லாத காலம்; ஆகையால் கூட்டமே இல்லை. ஆரவாரம் சிறிதும் இல்லாமல் இருந்தது. தமிழ்நாட்டில் உள்ள சிறிய கிராமம் போலத் தோன்றியது. ஆனால் சிறிய கிராமத்தில் அத்தகைய கட்டடங்களைக் காணமுடியாது. உற்சவ காலங்களில் பக்தர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளையுடைய பல சத்திரங்கள் கதிர்காமத்தில் இருக்கின்றன.

சந்நிதி வீதி தென்வடலாக இருக்கிறது. வடக்குக் கோயில் முருகனுடைய திருக்கோயிலாயும், தெற்குக் கோயில் வள்ளியம்மையார் கோயிலாயும் உள்ளன. முருகன் சந்நிதி தென்முகம் நோக்கியிருக்கிறது. ஞானகுரு மூர்த்தி தென்முகமாக நோக்கியிருப்பது மரபு. சனகாதி முனிவர்களுக்கு ஒப்பரிய மோனத்தைச் சின் முத்திரையினால் சொல்லாமற் சொன்ன தக்ஷிணாமூர்த்தி தென் முகம் நோக்கி எழுந்தருளி யிருக்கிறார். தம்முடைய தூக்கிய திருவடியால் அநுக்கிரகத்தைக் காட்டுவதோடு தென்றிசைத் தலைவனாகிய யமனை இன்னும் ஓட்டுவேன் என்னும் குறிப்பை அருளும் நடராஜப் பெருமானும் தென்திசை நோக்கி ஆடுகிறான்.

உலகில் உள்ள மக்கள் பல பல திசைகளிலே பிரயாணம் செய்கிறார்கள். அந்தப் பிரயாணத்துக்குரிய வாகனங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. உண்மையில் அவர்கள் தென்திசையை நோக்கியே ஒவ்வொரு நாளும் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். காலனுடைய கைப் படுவதற்காகவே தென்றிசையை நோக்கிச் செல்கிறார்கள். ஒரு மனிதனுடைய ஆயுள் எண்பது என்று வைத்துக் கொள்வோம். அவன் அறுபது ஆண்டுகள் வாழ்கிறான். இன்னும் இருபதாண்டு தூரம் அவன் பிரயாணம் இருக்கிறதென்று நாம் கணக்குப் பண்ணவேண்டும். இந்த உலகில் வாழும் ஒவ்வொரு நாளும் நம்மைக் காலனுடைய கைப்பிடியில் அகப்படும்படியாக உந்துகிறது. காலனூருக்குப் போகும் திசையில் ஒவ்வோராண்டும் ஒவ்வோரடி முன்னேறிக் கொண்டே இருக்கிறோம்.

விமல மாதபி ராமித குஞ்செய்ப் புதல்வோனே
தினமுமேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே.

நான்என ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்

என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஒவ்வொரு நாளும் நம் வாழ்வைக் குறித்துக் காலனாருக்கும் நமக்கும் உள்ள தூரத்தையும் குறைக்கிறது. பிரபஞ்ச வாழ்க்கைப் பிரயாணத்தில் நம்முடைய நடை தென் முகம் நோக்கி யிருக்கிறது. தெற்குப் பட்டினத்துக்குப் போக விரைந்துகொண்டிருக்கிறோம்.

சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே

என்று மணிவாசகர் கூறுகிறார்.

தென்றிசையில் இருந்துகொண்டு, எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் நம் கைப் பாசத்தில் வந்துதானே விழவேண்டும் என்று யமன் நினைத்து இறுமாந்து கொண்டிருக்கிறான். நாமும் அவன் இறுமாப்பை அதிகமாக்க அவனூரை நோக்கி நடை போடுகிறோம்.

இதற்கு நேர் எதிரான திக்கில் ஆண்டவன் அமர்ந்து எச்சரிக்கை செய்கிறான். கோயில் காட்டிக் கோபுரம் காட்டி மலை காட்டி மதில் காட்டி, "வடக்கே திரும்பு அப்பா" என்று குறிப்பிக்கிறான். "என்னைத் தரிசிக்க வேண்டுமென்று நீ எப்போது நினைத்து முதலடி வைக்கிறாயோ, அப்போதே நீ பிழைத்துப் போனாய். என் சந்நிதி நோக்கி வைக்கும் ஒவ்வோரடியும் உன்னைத் தெற்குத் திசைத் தலைவனிடமிருந்து விலகி நிற்கச் செய்கிறது. வா, இங்கே வா; வடக்கு நோக்கி வா" என்று குமரகுருபரனாகிய ஞான சக்திதரன் அழைக்கிறான். தெற்கே போய்க்கொண்டிருக்கிற நாம் சற்றே திரும்பிப் பார்த்தால் போதும். நேர் எதிரே தென் திசையின் மேல் திருவிழிப் பார்வையைச் செலுத்தி அஞ்சலென்ற கரதலத்தையும், ஆள்வேனென்னும் திருவடியையும் காட்டிக் கொண்டு முருகன் வீற்றிருக்கிறான். அவன் திருக் கோயிலுக்குச் செல்லும்போதே நம்முடைய பயணம் மாறுகிறது; தென் திசைக்கு எதிரான யாத்திரையாக

அன்பால்நின் தாட்கும்பிடுவர் தம்பாவந் தீர்த்து
நின்தாள் நந்தாட்கொண்டருள் தர நினைவாயே.

மாறுகிறது. 'சாமாறு' விரைந்து கொண்டிருந்தது போய் 'ஆமாறு' விரையும் முயற்சி ஆரம்பமாகிறது.

கதிர்காம வேலவன் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்திருப்பதில் எத்தனை உயர்ந்த கருத்துகள் பொருந்தியுள்ளன என்று சிந்தித்தேன். மாணிக்க கங்கையைக் கடந்தாலே பாவ புண்ணியக் கரைகளைக் கடந்து விடுகிறோம். அப்பால் கதிர்காம நாதன் சந்நிதி வீதியிலே வந்து அவன் திருக் கோயிலை நோக்கி நடக்கும்போது, நாம் யமனைப் புறக்கணித்து ஞானகுருநாதனுடைய ஞான வெளியை மெல்ல மெல்ல அணுகுகிறோம்.

கதிர்காம வேலவன் திருக்கோயிலை அணுகிக் கொண்டிருந்தோம். அங்கே மதில இல்லை; மண்டபங்கள் இல்லை. முன்னே ஒரு வளைவு (Arch) இருக்கிறது. நம்முடைய நாட்டில் அரசாங்கக் காரியாலயத்துக்கு முன்னே இருப்பது போல ஆரைச் சுவரும், அதனூடே செல்ல இந்த வளைவும் இருக்கின்றன. அது இந்த நூற்றுண்டிலோ, போன நூற்றுண்டிலோ யாரோ கட்டியிருக்க வேண்டும். அந்த வாயில் வளைவினூடே புகுந்தோம். உள்ளே சில கஜங்களுக்குத் திறந்த வெளி. அப்பால் திருக் கோயில் இருக்கிறது. வளைவைக் கடந்து கதிர்காம வேலவன் திருக் கோயில் சந்நிதிக்கு வந்துவிட்டோம்.

முருகனுக்குரிய படை வீடுகளை நான் தரிசித்திருக்கிறேன். உலக நினைவையே போக்கி முருகு மணத்தில் ஆழ்த்தும் திருச்செந்தூரைத் தரிசித்திருக்கிறேன். பழநி, திருப்பரங்குன்றம், திருவேரகம் ஆகிய தலங்களையும் பார்த்திருக்கிறேன். வேறு பல திருக் கோயில்களையும் கண்டு தரிசித்திருக்கிறேன். தமிழ் நாட்டுத் திருக் கோயில்கள் உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காத அற்புதங்கள். பலகாலம் அமைதியாக வாழ்ந்த சமுதாயத்தின் கலைக் கொழுந்து கோயில்; பக்தியிலே ஊறிய மக்களின் அன்பைக் காட்டும் அடையாளம் கோயில்; வேற்றுமைகளை மறந்து இறைவன் திருமுன் அடங்கி ஆணவங் கழலச் செய்யும் அதிசய சக்தியையுடைய இடம் கோயில். அந்தக்

அலைகடல் அடைந்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூடுமருகோனே
நின தாள்கள் பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே.

கோயில்களை யெல்லாம் கண்ட கண்களால் கதிர்காம வேலவன் கோயிலைப் பார்த்தால் கவர்ச்சி இராது. அதைக் கோயிலென்றே சொல்லத் தோன்றாது. நம்முடைய கிராமங்களில் மாரியம்மன் கோயில், பகவதியம்மன் கோயில் என்ற சில ஏழைக் கோயில்கள் இருக்கின்றனவே அவற்றைப் போலத்தான் கதிர்காமக் கோயில் இருக்கிறது. ஆனால் அந்த ஓட்டுக் கூரையின் மேல் மூன்று இடங்களில் மூன்று தங்கக் கலசங்கள் மின்னுகின்றன.

புறக் கண்ணுக்குக் கவர்ச்சியில்லாத திருக் கோயில் அது. அதைப் புறக் கண்ணிலே பார்த்த அளவிலே நின்றுவிட்டால், "இதுதானா பிரமாதம்?" என்ற நினைவே தோன்றும். உற்சவ காலங்களில் ஆயிரக் கணக்கான மக்கள் பக்தி ஆவேசத்தால் ஆடிக் கூத்திடும்போது இங்கே வந்திருந்தால், அந்தச் சூழ்நிலையினால் நம் உள்ளத்தில் ஒருவகையான எழுச்சி உண்டாகலாம். ஆனால் சாமான்ய காலத்தில் இங்கே வந்தால், இந்தக் கோயிலைக் கண்ட மாத்திரத்தில் எந்த விதமான உணர்ச்சியும் தோன்றாது. மனத்திலே பக்தி இருக்க வேண்டும்; கதிர்காம வேலவனுடைய புகழைப் பிறர் சொல்லக் கேட்டிருக்க வேண்டும்; நூல்களில் படித்திருக்க வேண்டும். அப்போது இந்த ஓட்டு வில்லைத் திருக் கோயிலே கந்த லோகமாகக் காட்சியளிக்கும். நம்முடைய மனப் பக்குவத்தை அளவிடுவதற்கு ஆண்டவன் இந்த மூலைக் காட்டில் ஓட்டுக் கூரைக் கோயிலில் எழுந்தருளி யிருக்கிறான். மனம் பக்தி யுணர்ச்சியில் ஈடுபடாதவரையில் இங்கே இன்பம் இல்லை.

(தொடரும்)

வருஷ வாழ்த்துப் பாடல்

கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ராகம் : ஷண்முகப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

கந்தனருளினாலே நந்தனவருஷமதில்
கார்முகில்பொழிந்து நம்நாடு செழித்திடவே. (க)

கான கண்ட னுமாபதி தருபாலா
நானு நைந்து விடாதருள் புரிவாயே.

அநுபல்லவி

வந்தனைவழிபாடும் சந்ததமும்பெருகி
சிந்தையுள் முருகனைவைத்துச் சிறப்புறவே. (ச)

சரணம்

1. எந்தனதுளம்புகுந்து இந்தவிதம் வாழ்த்தச்செய்த
எந்தைகுமரகுரு எந்த நலமுந்தந்து
தந்திரமாய் உலகைஏய்த்திடும் மாந்தர்களைச்
சரண்புகவேசெய்து கரங்குவித்தொதுங்கிநிற்க (ச)

2. நல்லவர்கள் பெருகிட நாடுசெழித்திட
நானிலமெங்கனும் அன்பு புரண்டோட—உண்மை
வல்லவர்களும் பதவி ஏற்றுநடத்திட
வனிதையர்களும் கற்பைக் காத்துநடந்திட (ச)

3. நாடுசெழித்திட ஞானம்பிறந்திட
ஞாலமெலாம் உண்மைப் பேரொளிவீசிட
வீடுபெற நல்ல காரியம் செய்திட
வீணகாரியம் செய்யப் பயந்திட (ச)

குருகைக் கவிஞர்

ரசபதி

தென் குருகை யென்பது, பாண்டி நாட்டில் ஒருபதி. அதனில் ஒரு அந்தணர். அவர், அருந்தமிழ் நுட்பம் அறிந்தவர். மாலடி மறவா மனத்தர். பிறமதம் வெறுத்தவர். இழிந்தாராயினும், பாகவதரெனில் அவர்கள் பாதம் போற்றும் பக்தியர். பன்னிரு நாமம் கூறி மூந்நான்கு நாமம் தரித்தவர். துளசிமணி வடம், முடிந்த குடுமி, பஞ்சகச்ச உடை, மேல் உத்தரியம்; இது அவர் கோலம். திருக் குருகையில் திருத்தோன்கள் நான்

சிவனருளு முருக செம்பொற் கழலோனே
பரவு தரிசனையை யென்றெற் கருள்வாயே.

கொடு நின்ற கோல இறைவனை யன்றி, இராமன் முதலிய அவ தாரங்களையும் எண்ணாது அவர் இதயம்.

முனியே! நான்முகனே! முக்கண் அப்பா! என் பொல்லாக்
கனிவாய் தாமரைக் கண் கரு மாணிக்கமே;

இது, நம்மாழ்வார் குரல்.

அரன் நாரணன் நாமம்; ஆன்விடை புள்ளூர்தி
உரை நூல் மறை; உறையும் கோயில்—வரைநீர்;
கருமம் அழிப்பு அளிப்பு; கையது வேல் நேமி;
உருவம் எரி கார்மேனி ஒன்று;

இது, பொய்கை யாழ்வார் பொன்னுரை.

தாழ்சடையும் நீள்முடியும்; ஒள்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால் — சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல், எந்தைக்கு
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து;

இது, பேயாழ்வார் பெருமொழி.

இங்ஙனம் உள்ள பாடல்கள், ஆழ்வார்கள் அறியாப் பருவத்தில் அருளியவை யென்பது, அவருடைய கண்டிப்பான தீர்மானம். சிவன் நம்மைப் போல் ஒரு ஆத்மா. அவனை வழிபடல் கேலிக் கூத்து; இது எங்கும் அவர் செய்து வரும் ஆவேசமான பிரசாரம். பரந்த நோக்குடைய சில பக்தர்கள், இதனால், அவரை மறை முகமாகப் பழிக்க லாயினர். அங்ஙாளில், அவரை யெதிர்க்கும் ஆற்றல் எவர்க்கும் இல்லை.

கல்வி மிகுந்து உணர்விற் சிறந்தோர், மூலம் உணராமல் மூடம் ஆவரேல், இயற்கை அவர்களுக்கு எதிர்ப்பை யெழுப்பும்; இது, என்று முள்ள வாழ்க்கை அநுபவம்

ஒருநாள் இரவு இரண்டுமணி. குருகைப் புலவர், தம் திருமாளிகையில் குதூகலமாகப் படுத்தார். நல்ல உறக்கம். என்ன அருமையான கனவு! குளு குளுத்த ஒளிவட்டம்; அதன் நடுவில் பூ முடித்த முன் குடுமி; திருவெண்ணீறு சண்ணித்த மேனி.

செழித்த நீலநிற மால் தனக்கு மருகோனே
அடியேனை விடுதவியான விறுமயில் மீதினூற்று வருவாயே.

திருச்செந்தூர் வேதியர் திருவுருவந்தான் அது. உள்ளம் அள்ளும் அக்கோலத்தில், உமையாள் மைந்தன் நிற்கின்றான்; குமுத வாய் மலர்கிறது.

கயிலை மலையனைய செந்தில் பதிவாழ்வோம்: புத்தமுதப் பாமாலை நீ எமக்குப் புனைய வேண்டும். கனம் பெறும் அதன் மூலம் உன் கல்வி; அதுதானு! பெருகிய அறிவும் பெறுவை குருகையா! வருகிறேன்! மறவாதே என்கிறான், கனவில் வந்த பெருமான்.

என்ன சங்கடமான கனவு! வெய்யிலில் அகப்பட்ட புழுப் போல், துடி துடித்துக் கண்விழித்தார் கவிஞர். விழித்தவர் விழித்தவர்தான். மீட்டும் உறங்கினால், கலைந்த கனவு மீட்டும் காண நேருமோ என்று, அஞ்சியது நெஞ்சம்.

பொழுது புலர்ந்தது. நித்திய கடனை முடித்தார். மிக விரைந்து, ஆழியான் கோயிலை யடைந்தார். விழுந்து வணங்கினார்; உள்ளம் பட படக்க எழுந்தார்.

அருமறை முதல்வா! ஆழிமாயா! கருமுகில் வண்ணா! கமலக் கண்ணா! திருமகள் தலைவா! தேவ தேவனே! என்பால் உமக்கு அருள் இல்லையோ! குறவர் வழிபடும் குறுந்தெய்வம், என்னை தன் அடியனுக்க எண்ணுகிறதே! இந்த அநியாயத்தை நீர் எங்ஙனம் சகிக்கிறீர்! அடியேன் உமது தாசன்

சக்கரம் கொள் கையனே! சடங்கர் வாய் அடங்கிட
உங்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே

என்று உரத்த குரலில் முறையிட்டு, ஓவெனக் கதறி யழுதார்; அதன் பின் தம் திருமாளிகைக்குத் திரும்பினார்.

அன்று பகற் பொழுது அகன்றது. மாலை வேளை. கோயில் சென்றார்; வழிபாட்டை முடித்தார். தம் மாளிகை அடைந்தார்; உணவு கொண்டார். காரரயனு! பிரபோ! எஞ்சா நின் இணையடிக்கே எப்பிறப்பும் ஆவாரி, அஞ்சாதிருக்க அருள்! என்று பரந்தாமனை வந்தித்துப் படுத்தார்.

வேலாயுதா உயர் அருணையில் வாழ்வாக மேவிய பெருமானே
அழியா வீடு போயினி யடைவேனோ.

மற்றும் ஒரு கனவு. ஒரு கரத்தில் வேல்; ஒரு கரத்தில் சக்கரம்.

அன்பனே! உள்ளம் சிறந்தனை; வாய்மை நிறைந்தாய்; எனினும், தெய்வ மெய்ம்மை ஓர்ந்திலை. யாமே முருகன்; திருமாலும் யாம்; நமக்கு இப்படியும் ஒரு கோலம் உண்டு. பயன் பெற, உன் வாக்கால் திருச்செந்திலைப் பாடு; பாவ பேதம் பறந்தோடும்; நிமல அருளால் நிறைவு வினையும் என்றபடி, என்ன வியப்பு! மகத்தான அத் திருவுருவம் விண்ணில் மறைந்தது.

நேற்றைய செய்தி, அன்பக் கனவாய்த் தோற்றியது; இன்றைய கனவு, நெருப்பில் நெய் வார்த்தது போல் இருந்தது. பதைத்து எழுந்தார்.

சீ என்ன இது! நம் வீட்டில் பேய் நடமாடுகிறதா என்ன? நாசகரமான கனவு என்று நடுங்கினர். பொழுது விடியும் வரை உறங்க விரும்பாமல் நடமாடிய படியே இருந்தார். வைகறையில் வைகுந்தன் திருமுன் சென்றார்; அன்பு தரு கனவு மீட்டும் தொடர்ந்ததே; முகில் வண்ணா! இது முறையோ! இது தகுமோ என்று முறையிட்டார்.

மறு நாள் இரவு, தமது மாளிகையில் கண்படை கொண்டிலர். பரமன் கோயில் அர்த்த மண்டபம் சென்று படுத்தார். நள்ளிரவு. என்ன அற்புதம்!

ஆழி சங்குஏந்தி, அபய வரத கரங்களுடன் அருள் கமலத் திருமுகம். கருணை பெருகும் கண்கள். பேரொளி மயமான திருமுடி. அணிபல அணிந்த தெய்வத் திருமால், கருடன் மேல் அமர்ந்த கோலம் காட்சி யாகிறது.

தம்மை அறியாமலே கைகள் தலைமேல் ஏறுகின்றன. உள்ளம் உருகுகிறது. கண்கள் இன்பக் கண்ணீரை பிறைத்தன. ஆதியஞ் ஜோதி யுருவை அங்கு வைத்து இங்கு வந்த அமலா!

முடி ஜோதியாய் உனது முகஜோதி மலர்ந்ததுவோ?
அடிஜோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?

மழுவுடை யெந்தை அமலன் மகிழ்ந்த குருநாதா
கருணை பொழிந்து முகமு மலர்ந்து கடுகி நடக்கொ டருள்வாயே

மகம் புரிந்தும், கங்கை யாதியாம் புனல் படிந்தும், யோகத் திருந்தும், மலர் தூவிப் பூசை நேர்ந்தும், எங்குமான உம்மை யடைய முயல்கிறது உலகம்; ஒரு முயல்வுமின்றி, எளிதில் உம்மைச் சேவிக்க எளியேன் என்ன தவம் செய்தேன்! பக்த வத்சலா! நின் பேரொளிப் பிழம்பை, இப்படியே என்றும் சேவிக்க அருள்!

மறந்துறந்து, வஞ்சம் மாற்றி, ஐம்புலன்கள் ஆசையால்
துறந்து நின்கண் ஆசையே தொடர்ந்து நின்ற நாயினேன்

இவ் எளியேன், அச்சுதா! பேயுடன் கூத்தாடும் சிவன் மகன், நின் அடியானும் என்னை, தனக்கு அடியனாக்க முயல்கின்றான். உமது சக்கரத்தோடு வேலும் தாங்கி, என் கனவில் காட்சி அளித்தவன் அவன் தானோ? ஆண்ட உன்னையன்றி, பிறிதொரு செல்வத்தை வேண்டேன். அருள்க நீயே எனக்கு ஆதி மூர்த்தி என்று அலறுகிறார் குருகை அறிஞர்.

திருமால் திரு முகத்தில், மோகன புன்னகை திகழ்கிறது.

அன்பனே! உருவை ஆராதிக்கும் உன் உள்ளம், எமது நிமல வியாபகத்தை நினையாதது ஏன்? ஆண் என உள்ள எவ்வுருவும், எம் சொரூபம்; பெண் உரு எல்லாம், அருளான திருவின் அம்சம்; வேறில்லை; இது மெய்ம்மை. பரிபாகத்திற்குத் தக்கபடி எவரும் வழிபட, பல் உருவில் எங்கும் எம்மை நிறுத்தியுளம்.

நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதோர் அருள் தன்னாலே என்ற ஆழ்வார் பயனான உரையைச் சிந்தித்துப் பார்; வியாபக வியாப்பிய நிலையால், எம்மில் சிவம் அடங்கும்; சிவத்தில் யாம் அடங்குவம். சிவத்தை ஆராதிக்கும் போது, சிவத்தி லிருந்து அந்த ஆராதனையை ஏற்பம்; எம்மை ஆராதிக்கும் போது, எம்மிலிருந்து சிவம் அவ் வழிபாட்டை ஏற்கும். எம்மைப் பாராட்டும் நூற்கள், விஷ்ணு புராணம் சொன்ன தலைமைப் பாகவதன் சிவன் என்று கூறும்; சிவத்தைப் பாராட்டும் நூல்கள்,

---

தேவ மகட் கோர் கருணைப் பெருமானே
உட் சோதி யொளிப் பாதமளித் தருள்வாயே.

தலைமைச் சிவனடியார் விஷ்ணு என்று பேசும்; இச் செய்தி வியாபக வியாப்பிய நுட்பம் உணர்ந்தார்க்கே விளங்கும்.

பொன்திகழும் மேனிப் புரிசடையெம் புண்ணியனும் ;
நின்று உலகம்தாய நெடுமாலும்;—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்.

இது, பொய்கையாழ்வார் புனித மொழி.

நாரணன்காண்; நான்முகன்காண் ;

இது, அப்பர் அருள் வாசகம்.

அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்;
அரனாய் அழிப்பவனும் தானே.

இது, சேரமான் பெருமான் திருவாசகம்.

இவைகள் போன்ற நுட்ப உரைகளை நுனித்து உணர்க்திலை. பன்மை யழிய, ஒழிமை பிறக்க, ஒரு தெய்வ வழிபாடு வேண்டப் பெறும். அக்காலத்தில் மற்ற மூர்த்திகளை அவமதிக்க வேண்டுமா? அம்மூர்த்திகளை வழிபட்ட அன்பர்களை அவமதிப்பதா! இந்த தவறான வழியை கற்றவர்கள் கைக்கொண்டு, சமயப் பிணக்கில் சதுரங்கமாடி, நாஸ்திகம் பரப்பும் ஆஸ்திகர் ஆவது அறமாகுமோ? எம்மதமும், மூலப் பரம்பொருளை வழிபடும் சகோதர மதங்கள் எனக்கொண்டு, தன் வழிபாட்டில் நிலைத்திருப்பதுவே தவறு. நதிகளெலாம் வந்து கடலில் கலப்பது போல், எந்த மத வழிபாடும் அருள் சமுகத்தை யடையும் என்று எண்ணிவிடு !

மயிலேறும் பெருமானைப் பாட மறக்காதே; மறக்கும் சிற்றினத்தைச் சேராதே! எம்மில் முருகன்; முருகனில் யாம்; எம்மைப் பெருமான் என்பர் பாகவதர்; ஆறுமுகனை முருகப் பெருமான்; குமரப் பெருமான்; குகப் பெருமான் என்று கூறுவர் சிவனடியார். பேத பாவனை விடு ; யாமென்றே முருகனைப் பாடு;

கலிகழும் வருமுன் குலனிலை களையுங்
கழல் தொழு மியல்தந் தருள்வாயே.

வரவர இதன் நுட்பம் விளங்கும். இதனை உணரவில்லையேல், கற்ற கல்வி, செய்யும் பக்தி யெல்லாம் விழலுக் கிறைத்த நீர்.

இப்பிறப்பில் இவ்வுருவை வழிபட்டாய். முற்பிறப்பில் முருகனை வழிபட முயன்றனை. அறிது தோன்றுகிறது, இப் பிறப்பில் அத்தொடர்பு என்றுரைத்த திருமால் திருவுருவம் விரைந்து விண்ணில் கலந்தது !

திடுக்கிட்டு விழித்தார் புலவர். திகைத்தார். என்ன ஆச்சரி யம்! திருமால் திருவாய் மொழியா இது? இல்லை! இல்லை. என்னை யாளும் திருமால் உருவில் வந்தவன், பிச்சை யெடுக்கும் பிரபுவின் பிள்ளையேதான்! எவ்வளவு சதுரம் கட்டிய பேச்சு! முருகனும் திருமாலும் ஒன்றும்! எவ்வளவு ஆணவம் !

அஃதிருக்கட்டும். நம் அடியவனை, முருகன் தன் அடியவ னுக்க முயல்கிறான்; அவனைத் தடுத்து, கலங்கும் நம் பக்தனைக் காக்க வேண்டும் என்று, எந்தை முகில் வண்ணன் எண்ணினன் இல்லையே! இறந்தானோ அந்த எழிலி வண்ணன்? சீ! அப்படி யெண்ணுவது பிழை. கடையவன் என்று கைவிட்டு விட்டானோ? நம்பிய தெய்வம் நட்டாற்றில் விட்டதெனில், இனி இந்த உல கில் எனக்கு ஏது இடம்! பிறிதொருவன் வலிந்திழுக்க, கைப் பிடித்த கணவன் போன்ற தெய்வம் கண்மூடி வாளா இருக்கு மெனில், என் கற்பை நான் காக்க இறப்பதே கடன் என்று எண்ணுகிறது உள்ளம்,

ஆணவப் பிடிப்புடைய ஆன்மாவை, பரந்த நோக்கம் பலிக்க திருத்தி உய்விப்பது லேசிலில்லை என்பது, இங்கு நன்றாக விளங்குகிறதல்லவா !

ஆலயத்தில் உயிர விடுதல் அறன் அன்று என்று சொல் கிறது உள் உணர்வு. சரி, பொழுது விடியட்டும் என்று பொறுத் திருக்கிறார் புலவர்.

பாண்டியில் ஒரு பகுதியை ஆள்பவன் வடமலை யப்பன் எனும் மன்னன், ஏதோ ஒரு காரியமாக வந்தவன், அன்றிரவு தென் குருகைப் பதியிலே தங்கினன்.

அருணை நகர் மிசை கருணையோ டருளிய
பரம வொருவச னுமிரு சரணமு மறவேனே.

நல்ல நித்திரை. சிறந்த ஒரு 'கனவு. வேந்தன் முன் வேல் முருகன் நிற்க, கண்டதும் வியந்து கைகுவித்தான் காவலன்.

வடமலையப்பா! குருகைப் புலவன், வைகறையில் கோயிலை விட்டு வெளி வந்து, தற்கொலை செய்துகொள்ள எண்ணியுளன். நம் ஆணை பிறக்கும் வரை, வெள்ளி விலங்கிட்டுக் காக்க வேண்டும் அவனை நீ. திருமால் உருவில் என்னை வழிபடும் அவன், என் அன்பன். நினைவிருக்கட்டும் என்றனன் விமலன்.

விழித்த மன்னன், கந்தப் பரமன் கருணையை நினைந்து வியந்தான். அன்றிரவே கம்மியர்க்கு இட்ட கட்டளைப்படி, வெள்ளி விலங்கு சமைந்தது

வீரர் எண்மரை விளித்தான். அதிகாலையில் கோயில் உள்ளிருந்து வெளி வரும் புலவரை, என் முன் கொணர வேண்டும். மரியாதைத் தாழ்வு கூடாது; அவர் போக்கில் போகவும் விடக் கூடாது என்பது காவலன் கட்டளை.

விரைந்தனர் காவலர், கமலநாபன் கோயில் வாயிலில் காத்திருந்தனர். பொழுது புலர்ந்தது. வெளி வந்தார் புலவர்.

நில்லும் என அதிர்ந்தது ஒரு குரல், திடுக்கிட்டு நோக்கினர் புலவர்.

அரசர் உம்மை அழைக்கின்றார்; வருக என்றான் தலைமைக் காவலன்.

குற்றம் ஒன்றும் செய்திலனே; நம்மைக் கூப்பிடுவது ஏன்? தற்கொலை எண்ணி விரைகிறேன்; வேந்தன் ஆணை குறுக்கிடுகிறது: என் செய்வது என்று எண்ணினார்.

காலைக் கடன் முடித்து, நீராடி, அநுட்டித்து வருகிறேன்! நீங்கள் செல்லுங்கள்! உடனே வருகிறேன் என்று, அவர்களை ஏய்க்க, வினயமொடு கூறினர் கவிஞர்.

முடியவே முடியாது! மரியாதையாகப் புறப்படும் என்றனர் காவலர். காலை உபாதி கழிக்க மட்டும் உடன்பட்டனர்;

இறைவர் கேட்கத் தகுஞ்சொல் உடையோனே
தெளிய மோக்ஷத்தை யென்று அருள்வாயே.

அதுவும் தம் பார்வையில் தான். அதன் பின், ஓடப் பார்க்கும் அவரை, சிறிது உக்ரம் காட்டிக் கூட்டிச் சென்றனர்.

காவலர் காப்பில் வந்த கவிஞரைக் காவலன் கண்டான். எதிர்கொண்டு வணங்கி பீடத்தில் இருத்தினான்.

ஆன்மாக்களைக் காக்கும் ஆறுமுகன் கட்டளை. இவ்வெள்ளி விலங்கைத் தரிக்க வேண்டும் தாங்கள். வீர மயேந்திரத்தில் விண்ணவர் விலங்கவிழ்த்த விசாகன், மதிகெட்டு மூளைப்புள்ள விதிக்கு அன்று விலங்கிட்டான். அதே பெருமான், இன்று உமக்கு விலங்கு இடுகின்றான்; எல்லே உமது புண்ணியம் என்று கூறி, காலிற்கு விலங்கணிந்து, சிறைக்களத்தில் சேர்த்தான்.

நீராட்டி உணவூட்ட எண்மர் வேதியரை ஏற்பாடு செய்தான். அலாதன்றி, வீரர் எண்மரை நோக்கிய வேந்தன், கவிஞரைக் கொணர்ந்தீர்கள்; மேலும் கேளுங்கள்! அணிவித்தவன் விலங்கை அவிழ்க்கும்வரை, இவர் உயிர் காப்பது உங்கள் கடன். அண்மையி லிருக்க வேண்டும். இடையூறு நேருமேல், உம் தலைகள் நிலத்தில் உருளும்; அதன் பின் யானும் உயிர் வாழேன் என்று எச்சரித்தான். தானும் கெல்வேலி செல்லாமல், குருகையில் தங்கி, கவிஞர் காப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

தமிழ் நாட்டின் வடக்கெல்லையான திருவேங்கடத்தை வடமலை யென்பர். வடமலையானை, முருகனென, திருமாலென உணர் வழக்கு உளது. மாலாய், மாலின் மருகனாய் மாறி மாறி காட்சி வழங்கி, பேத புத்தி மாற, தெய்வ வடமலையப்பன் செய்த தண்டம் என எண்ணும்படியும் இது இருக்கிறதல்லவா !

மன்னன் ஆணையை மறுக்க முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. என்ன அராஜகம் இது ? கால் விலங்கு பெறுவது புண்ணியமாம்! வித்தகப் பாடல் பெற, விலங்கணியும் தெய்வம் நல்ல தெய்வந்தான்! மகைக்கிறார் புலவர்.

விமல விசாகன் உபதேசம்; திருமாலின் தெளிவுரை எவ்வளவு அருமையானது; இதை உணராத குறுகிய அறிவுள

நின்னை யுணர்ந்துருகிற்போற் பதுமக் கழல் சேர்வார்
தங்கு புரத்தி லென்னையு மன்போடு வைக்கச் சற்றுக் கருதாதோ

குருகைக் கவிஞர், ஆணவ மறைப்பால் சிறையில் அலமந்தார். சிறைவாசம் நரகவாசம் போல் உளது

ஒவ்வொருநாளும் கனவுக் காட்சி. எமது மாமன் காண் திருமால்! இது, ஒருநாள் கனவில் முருகன் அருளியது.

எமது மருகன்காண் முருகன்! இது, ஒருநாள் கனவில் திருமால் அருளியது.

மைத்துனர் காண் யாம்! இது ஒருநாள் கனவில் சிவனும் திருமாலும் உரைத்தவை.

ஒருநாள் கனவில் சிவனும் திருமாலும் ஒன்ற, இருவரும் முருகனில் ஒன்ற, முருகன், குருகை யன்பனே! எனக்கொரு பிரபந்தம் பாடடா என்று கேட்க, திடீரென்று புலவர் விழித்தார்.

உடல் நடுங்கியது; உள்ளம் உருகியது. புனித கனவை நினைத்துப் புளகித்தார்.

சிறைவிடந்தாதி என்ற பிரபந்தம் சிந்தனையில் நின்றது. அவரையும் அறியாமல் பாடுகிறது அவர் வாய். பத்துப் பாட்டானதும்.

செய்வதொன்றும் யானறியேன் செந்திற் குமரேசா!
பெய்த விலங்கு அகற்று பெம்மானே!—தெய்வவழும்
வேலா! மயிலேறும் வேந்தே! மலைமகளார்
பாலா! அருள் பார்த்திபா!

என்ற பதினோராம் பாடலை வாய் பாடியது. பாடும்போது உள்ளம் பாகாய் உருகி ஆடியது.

படீர்! படாரென்ற பேரொலி. என்ன இது? அருகிருந்தவர் உடலும் உள்ளமும் அதிர்ந்தது. விமலன் ஞான வேல் மோதிய வினைவால், விலங்கு முறிந்து விழுந்த ஒலி அது. அதைப் புலவர் அறிந்திலர். பரவசம் மிகுந்து பாடியபடியே இருக்கிறார்.

அதே நேரத்தில் வடமலையப்பன் கனவில் வந்த அமலன், இனி நீ இவையிவை செய்க என அருளி உருக் கரந்தனன். விழித்து வியந்த மன்னன் முன், காவலர் வந்தனர்; நடந்ததை உரைத்து வணங்கினர். நீராடி, வைதிக அநுட்டானங்களை முடித்து, வேக்

.மயிலேறி யன்று நொடிபோதி லண்டம் வலமாக வந்த குமரேசா
அறிவே யழிந்து அயர்வாகி நைந்து அடியேன் மயங்கி விடலாமோ

தன் விரைந்தான். பிரபந்தத்தைப் பூர்த்தி செய்த புலவர், முருக குமர குகா என்று ஜபித்து, ஆனந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக, பரவசத்துடன் இருந்தலைப் பார்த்தான். நெஞ்சம் நெகிழ்ந்து வணங்கினான்.

பாவலரைப் பல்லக்கில் எற்றினான். திருச்செந்தூரை அடைந்தான். சிறைவிடந்தாதி அரங்கேற்றம் அற்புதமாக நடைபெற்றது. திருச்செந்தூர்த் தெய்வம், இப்பிரபந்தத்தை மனனம் செய்வார் பிறவிச் சிறை தீரும் என்று ஆவேசகர் மூலம் அருளியது.

அபேத நிலையின் உண்மையை அறிந்த பாவலர், திருவருளின்பம் திளைத்தார். வடமலையப்பன், புலவர்க்குத் தலை மாணவனாகித் தனி யின்பம் பெற்றான்.

பாவாணர் அருட் பரிசு பெற்றார்; பரமனும் பாடல் பெற்றான் என்பது இவ்வரலாற்றை இன்றும் போற்றுகிறது இவ்வுலகம்!

சேக்கிழார் செய்தது

இளவழகனார்

(8-ஆம் மலர் 428-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணி மலைச் சிறப்பு, நீர் நாட்டுச் சிறப்பு, திருவாரூர் நகர்ச் சிறப்புகளை விளக்கிய ஆசிரியர், அத் திருவாரூரில் விளங்கிய அடியார் திருக் கூட்டச் சிறப்பையும் எடுத்தோதி மகிழ்கின்றார்.

மலையைப் பேசினாலும் நாடு நகரங்களைப் பேசினாலும் எதைப் பேசினாலும், பேச்சு முடிய வேண்டிய இடம், அடியார் பேச்சு என்பது இதனால் விளங்குகின்றது. உலகமும் கடவுளும் உயிர்களின் வாழ்வுக்கு உதவி! உயிர்களின் வாழ்வில், முடிந்த நாகரிக வாழ்வாகத் திகழ்வது அடியார் வாழ்வு! ஆதலால், இறையைப் பேசினாலும்

கேள்விமிக்க வேதத் தோர் துதித்த பெருமானே
தாபமிக்க தீமைக்கு ஆவிதப்ப நேரிதாராய்.

வேறு எதைப் பேசினாலும், பேச்சும் நினைவும் செயலும் சென்று முடியும் இடம், அடியார் திறமல்லது வேறில்லை.

அடியார் புகழ் போற்றும் திருத்தொண்டர் புராணத் தின் மாட்சியும், அதனை இயற்றிய சேக்கிழார் தகுதியும், இதனால் மிக மேன்மையாகத் தோன்றுகின்றன. ஏனென்றால், பெரிய புராணம் வாழ்க்கையின் முடிந்த நிலைகளைப் பற்றிப் பேசுகின்றது.

அடியார் திறம், திருக் கூட்டச் சிறப்பு என்னும் பகுதியில் மிக அருமையாகவும் மிகு நுட்பமாகவும் எடுத் துக் காட்டப் படுகின்றது.

எத்தனையோ திருப்பதிகள் நமது நாட்டில் விளங்கு கின்றன. அவற்றில், திருவாரூர்க்குச் சில தனிச் சிறப்புக் கள் உண்டு. அச் சிறப்புகள் பலவற்றிலும், ஒரு தலைமை யான சிறப்பு, திருவாரூர்த் திருக் கோயிலுக்கு மட்டும் உண்டு. அதுதான், அடியார்கள் திருக் கூட்டமாக ஆங்கே தங்கிப் பொலியுங் காட்சி!

அடியார் திருக்கூட்டம் தங்கியிருக்கும் புனித மண்ட பம் அங்கே 'தேவாசிரிய மண்டபம்' என்று பெயர் பெறும். தேவர்களுக்கும் நெறி காட்டுவோர் அடியார்; ஆதலின், அடியார், 'தேவாசிரியர்' எனப் பெற்றார். அவர் இருக்கும் மண்டபம் 'தேவாசிரியன்' எனப் பெற்றது.

மேலும் அடியார்கள், தெய்வத் திறம் விளங்கும் குருமார் ஆதலாலும், 'தேவாசிரியர் என்னும் பெயர்க்கு அவர் உரியவரே!

அடியார் மண்டபம், திருவாரூரில் திருக்கோயிலின் முகப்பில் திகழ்வது! திருக் கோயிலுக்குச் செல்வோர்,

---

கனக சபை மருவு கந்தப் பெருமானே
பரவு தரிசனையை யென் றெற் கருள்வாயோ.

முதலில் அடியார்களைத் தொழுது கொண்டு, பின்பு அவர் அருளும் அருள் வெளிப்பேற்றில் ஆண்டவனை வணங்கிக் கொள்வது வழக்கம்; இயல்வதும் முறைமையும் இதுவே!

அத்தகைய பெருஞ் சிறப்பு, திருவாரூர்த் திருப்பதிக்கு அமைந்துள்ள காரணத்தினாலேயே, திருக்கயிலையிற் காதலுணர்வு கொண்ட நம்பியாரூரரை, அடியார் உறவினால் உணர்வு முறுகுவிக்கக் கருதிய திருவருள், அவரையும் பரவையாரையும் திருவாரூரிற் சேர்ப்பிக்க உந்தியது! அவர் திருமணத்தையும் அங்கே முற்றுவித்து இருவர் உணர்வையும் அடியார் திறத்தில் முறுகுவித்தது! அவர் வாயிலாகத் திருத் தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகத்தால் உலகையும் உய்வித்தது!

திருவாரூர்த் தேவாசிரிய மண்டபம் பாற்கடல் போலவும் அகில லோகமும் போலவும் விளங்கியது!

பரந்த வெள்ளொளியும் தூய்மையும் அலையொலியும் உள்ள பாற்கடலைப் போல, அடியவர் வெண்ணீற்றொளியும் தூய்மையும் ஐந்தெழுத் தொலியும் இத் தேவாசிரிய மண்டபத்திலும் விளங்கின. எல்லா உலகங்களுக்கும் காரணமானவராகிய இறைவனுடைய திருவடியைத் தொழுகின்றவர்கள் அடியார்களாதலால், அவர்கள் எல்லா உலகங்களையும் ஆளுதற்குரியவர்கள் என்று கருதி, எங்கும் உள்ள உலகத்தோர் பலரும் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து நிற்பதைக் காண, அம் மண்டபம் 'அகில லோகம்' எனக் காட்சியளித்தது.

அங்கு விளங்கிய அடியார்கள் எண்ணிலாதவர்கள்! அன்பும் உண்மையும் தழைத்தவர்கள்; அப் பண்புடன்,

---

அருணை வீதிலே மயிலி லேறியே அழக தாய்வரும் பெருமானே .
முறைமை யாகநின் அடிகள் மேவவே முனிவுதீரவந் தருள்வாயே.

ஏதேனும் கைத் தொண்டு செய்யும் உடலுழைப்பும் உடையவர்கள்! கடமை யுணர்வு சிறந்தவர்கள்!

மேனி மேல் பூசும் திருநீற்றைப் போலவே உள்ளமும் புனிதமானவர்கள்! தம் திரு முக ஒளியினால் எப் பக்கமும் விளக்க வல்லவர்கள்! அடியவர் பெருமை, பேச்சுக்கு அடங்காது!

மண் நீர் முதலான ஐந்து பூதங்களும் தம் நிலையிற் கலங்கி உலகமே நிலை குலைந்தாலும், இறைவன் திருவருளை மறவாமல் அவ்வுணர்வில் அமைதியாக விளங்குவோர்! குண மலை என்பது அவர்களுக்குப் பொருந்தும்!

அடியவர்கள் எந்நாளும் குறைவு நிறைவு இல்லாத உள்ளங் கொண்டவர்கள்! சிந்தை நிறைவாகிய அத்தகைய பெருஞ் செல்வம் படைத்தவர்கள்! மண் ஓடும் செம் பொன்னும் அருளுணர்வில் சமமே என்று காண்பவர்கள்! தம்மால் இயன்ற அன்பில் திருவருளைத் தொழுவதன்றி, வேறு 'வேண்டுதல்' என்னும் நினைவே இல்லாதவர்கள்! வீடு பேறேயாயினும் அதனையும் வேண்டுதல் என்பது இல்லாத ஆற்றல் படைத்தவர்கள்! அடியார்க்கு உடம் பில் அணியும் மாலை உருத்திராக்கமே; அவர்கள் ஆடையும் கந்தையே! இறை பணியல்லது பாரம் இல்லாதவர்கள். உயிர்களிடத்தில் இரக்க அன்பினர்! யாதும் குறைவு இல்லாதவர்கள்! இத்தகைய அவர்களுடைய பெரு வீரத் தைப் புகழ யாரால் இயலும்!

யாவரும் விரும்பக் கூடிய அருட்கோலப் பொலிவு உடையவர்கள்! தாண்டவப் பெருமானாகிய எல்லா உல கங்களையும் இயக்கும் இறைவனுக்குத் தனித் தொண்டர்

அடிமை கொடுநோய் பொடிகள் படவே அருண கிரிவாழ் பெருமானே
அடியேன் அல்லு மொழிதான் ஒருவர் பரிவாய் மொழிவாரோ

கள்! நிறைந்த பழம் புகழ் வாய்ந்து விளங்கும் அப் பெரு மக்கள் நிலைமையை ஏதோ அறிந்த அளவு வாழ்த்துதலும் துதித்தலு மல்லது, அவர்கள் திறத்தை முழுமையும் அறிந்து கொள்ளுதல் இயலாது!

இத்தகைய மாதவர் திருக்கூட்டத்தைத் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் காணப் பெற்றுத் திருத் தொண்டத் தொகை' என்னுந் தமிழ்த் திருப்பதிகத்தால் நம்பியாரூரர் போற்றினர். அவர் பேறு பெரியது!

தமிழ்த் திரு நாடு இங்ஙனம் மெய்யடியவர் திருக் கூட்டம் சிறந்த நாடு! திருவாரூர்த் தேவாசிரிய மண்டபம் இத் திருக்கூட்டச் சிறப்புக்குப் பேர்போன இடம்! அடியவர்களின் இயல் இன்னது என்று அவர்கள் உள்ளம் உரை செயல்களின் இயலை ஆசிரியர் சேக்கிழார் மிகத் தெளிவாக வகுத்து வகுத்து விளக்கி யருளியது, மக்கள் அறிந்து அந்நிலையில் உயர்வதற்கே யல்லது வேறு எதற்கு? தமிழ்த் திருநாட்டு நன்மக்கள், தமக்குரிய இப் பழம் புகழை மிகுத்துக் கொள்வார்களாக!

திருவருட்பா ஆசிரியர் வரலாறு

பேரா. அ. துரை அரங்கசாமி M.A.,M.O.L.

(மூன்றும் மலர் 380-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளலார் பயின்ற வகை

உரையும் பாட்டுமாக, வள்ளலார் நம் பொருட்டு அருளிச்செய்தவை, பெரும்பான்மையாகக் கிடைத் துள்ளன. அவற்றுள், பாட்டாகக் கிடைத்தவற்றை ஆறு திருமுறைகளாக அவருடைய அணுக்கத் தொண்டர்கள் வகுத்துள்ளார்கள்.

கலப மரகத துரகத ந்ருபகிரி மயில் வாழ்வே
ஒரு வசனமும் இருசரணமு மறவேனே.

வள்ளலார் அருளியுள்ள உரையையும் பாட்டையும் ஊன்றி நோக்குமிடத்து அவர் இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய எல்லாவற்றிலும் நிரம்பப் புலமையுடையவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும். வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் நீந்திக் கரைகண்டவர் வள்ளலார் என்பதும் அவற்றால் வெள்ளிடை மலையாகப் புலப்படும்.

'தொண்டைமண்டலம்' என வழங்குவது தக்கதா, 'தொண்டமண்டலம்' என வழங்குவது தக்கதா எனப் புலவர்கள் கூட்டத்தில் எழுந்த ஐயத்தை வள்ளலார் தீர்த்துத் தொண்டமண்டலம் என வழங்குவதே தக்கதாம் என முடிவு கூறியிருக்கும் பகுதியைப் படித்துப் பார்த்தால், அவர் சங்கநூல் முதலிய இலக்கியங்களிலும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும் எவ்வளவு நிரம்பிய புலமை யுடையவர் என்பது நன்கு விளங்கும்.

உரைநடையில் **மனுமுறை கண்ட வாசகம்** என வள்ளலார் எழுதியிருப்பது, பெரியபுராணத்தில் வரும் மனுச்சோழன் வரலாற்றின் சிரிய விளக்கவுரையாகும்.

கணக்கில்அவதானி தேவிபட்டினம் முத்துசாமிப் பிள்ளைக்கு வள்ளலார் எழுதிய கடிதத்தின் இரண்டே வரிகள் இன்றும் எவராலும் திறக்கமாட்டாத பூட்டாகவே உள்ளன.

அவருடைய பாடல்களெல்லாம் தேவார திருவாசகப் பாடல்களின் விரிவுரைகளாகவும் விளக்கவுரைகளாகவும் உள்ளன.

அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே
கழல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

திருக்குறளை ஏற்ற இடங்களில் அப்படியே எடுத் தாண்டும், கருத்தை விளக்கியும் இருக்கும் இடங்களெல் லாம் உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் வகையாக உள்ளன.

இங்கிதமாலை ஒன்றே போதும் அவருடைய ஐந்திலக் கணப் புலமையையும் அளந்தறிந்து கொள்வதற்கு!

சமய சித்தாந்தக் கருத்துக்கள் திருவருட்பா முழுமையிலும் மிளிர்கின்றன.

இவ்வாறு பல்கலைப் புலவராக விளங்குவதற்கு வள்ள லார் எவ்வளவு உழைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்? எத்தனை ஆசிரியர்களை நாடிப் பாடம் பயின்றிருத்தல் வேண்டும்? எவ்வளவு காலம் இடைவிடாமல் நூலும் கையுமாக இருந்திருத்தல் வேண்டும்? இவ்வாறெல்லாம் திருவருட்பாவைப் பயில்வார் எவரும் எண்ணவே செய் வார். ஆனால் உண்மை யாது?

வள்ளலார் கி. பி. 1823-ஆம் ஆண்டில் தோன்றினார்; 1874-இல் மறைந்தார். எனவே, அவருடைய காலம் தேவார திருவாசக ஆசிரியர்கள் காலம்போல நமக்கு எட்டாத தொன்றன்று. வள்ளலாரைக் கண்ட சில பெரியார்களும் இன்றும் உயிரோடு இருக்கின்றனர். வள்ளலார் வழிவழி மாணவர்களாகச் சன்மார்க்க சங்கங்கள் அமைத்துக் கொண்டு இன்று எத்தனையோ ஆயிரக் கணக்கான பேர்கள் உள்ளனர். அவர்களெல்லாம் ஒருமுகமாக உரைப்பது, **வள்ளலார் ஓதாது உணர்ந்தார்** என்பது. இவ்வாறு கூறு வதைக் கேட்போரில், வள்ளலாரிடத்து அன்பும், சமய துறைக் கருத்துக்களில் நம்பிக்கையும் உடையோர் தடை யொன்றும் கூறுவதில்லை. மற்றவர்களோ இச் செய்தி

மதிநாவு செய்கை அரசு நடங்கொள் மலைமாது தந்த முருகேசா
அறிவே யழிந்து அயர்வாகி நைந்து அடியேன் மயங்கி விடலாமோ

வள்ளாருக்கு மதிப்புக் கொடுக்கும் நோக்கத்துடன் அவரைப் பின்பற்றி நிற்போர் கட்டிவிட்ட கட்டுக் கதை என்பர். இது குறித்து வள்ளளாரே யாது கூறியிருக்கின்றார் என்பது தெரிந்தால் ஒதாதுணர்ந்தமை கட்டுக் கதையா உண்மை வரலாறு என்பது விளங்குமன்றோ? மற்றவர் உரையாகிய புறச்சான்றைப் போல் திருவருட்பா ஆசிரியர் உரையாகிய அகச்சான்று புறக்கணித்தற்கு ஆகாதன்றோ?

தந்தையை யிழந்து, தமையனார் சபாபதிப்பிள்ளை ஆதரவில் வாழ்ந்துவந்தபோது, வள்ளலார் எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் சென்றதாக யாண்டும் குறிப்பில்லை. சபாபதிப்பிள்ளை, தம் தம்பியாரை ஐந்தாமாண்டிலாவது, படிக்கத் தொடக்குவித்திருப்பார் என்பது எவரும் ஒப்ப வேண்டுவதொன்று. சபாபதிப்பிள்ளை, தம் தம்பியார்க்குத் தாமே எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுத்தார் என்றும், பிறகு காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியாரிடம் அவரைப் படிக்க அனுப்பினார் என்றும், தமையனாரிடமோ மகாவித்வானிடமோ வள்ளலார் கருத்தூன்றிப் படிக்கவில்லை என்றும் வள்ளலார் வரலாறு கூறுவார் அனைவரும் ஒப்பக் கூறுகின்றனர். கருத்தூன்றிப் படிக்காத காரணத்தால் எழுத்தைக்கூட வள்ளலார் கற்றுக் கொள்ளவில்லை என்பது கூடாது. தமையனார், தம்பியாரை மகாவித்வான் சபாபதிமுதலியாரிடம் பயிலவிட்டார் என்று சொன்னால் மகாவித்வானிடம் செல்லுவதற்கு முன்பே சில நூல்களையாவது வள்ளலார் படித்திருக்கவேண்டும். எடுத்த நூலை விரைவாகவும் பிழை

முட்டுப் பட்டுக் கதிதோறும் முற்றச் சுற்றிப் பல நாளும்
தட்டுப் பட்டுக் கழல்வேலைச் சற்றுப் பற்றக் கருதாதே.

யின்றியும் படிக்கவும் ஆற்றலில்லாத ஒருவரை, மகாவித்வான் தம்முடைய மாணவராக ஏற்றார் என்றால் மகாவித்வானையே கேலி செய்வதாகும். மகாவித்வானிடமும் நீண்ட நாள் வள்ளலார் பயிலவில்லை என்பதனால் அவரிடம் ஒன்றுமே பயிலவில்லை என்று கூறிவிட முடியாது. எனவே தமையனாரிடமும், மகாவித்வானிடமும் எடுத்த நூல்களைப் பிழையறப் படிக்கும் அளவு பயின்றார் என்பது துணியலாம். இவ்வாறு பயின்று வரும்போதே இறை வழிபாட்டிலும் வள்ளலார் ஈடுபட்டிருந்தமையின் அவ் வீடுபாடு காரணமாகவும், முன்னைப் பிறப்புக்களில் செய்திருந்த கல்வினையின் காரணமாகவும், மக்கட் பிறப்பினராய இவ் விருவரிடமும் ஒவ்வொன்றாகப் பன்னாள் முறையாக நூல் பயில வேண்டாராய்த் தாமே தம்மையடைந்த எந் நூலாயினும் அந் நூலைப் படித்துப் பொருள் விளங்கக் காணும் பேறு பெற்றார் வள்ளலார் என்று கொள்ளலாம். "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து" என்பது தெய்வத் திருமறையின் உட்கோள் ஆதலின், வள்ளளார் தம் முற்பிறப்பில் முற்றக் கற்ற கல்வி, இறுதிப் பிறப்பாகிய இப் பிறப்பில் பிறர் உணர்த்த வேண்டாது, தாமாகவே உணர்ந்து கொள்ளுமாறு வந்து உதவிற்று என்று கூறலாம். அவ்வாறு அஃது உதவுவதற்கும் இறைவன் திருவருளின் துணை வேண்டற்பாலது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கிணங்க, உலகில் அவர் தோன்றிய நாள் தொடங்கியே அவருடைய உள்ளம் இறைவன் திருவடியில் படியலாயிற்று. எனவே, வள்ளலாருடைய முற்பிறப்பில் முற்றிய கல்விப் பயிற்சி,

---

வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொளைசீலா
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ.

இப் பிறப்பில் திருவருள் துணையால் வந்துகூட, அவர் எல்லா நூல்களையும் ஒருமுறை பார்த்த அளவில் விளங்கிக் கொள்ளவும், இலக்கண வழுவின்றி அணி நலத்தோடு எனைய நூற்கருத்துக்களை யெல்லாம் அமைத்துப் படிப்பார் உள்ளத்தை உருக்கி அதை அள்ளிக்கொள்ளும் வகையில் பாடல்கள் பாடவும் ஆற்றல் பெற்றார். இவற்றை வள்ளலாரே தாம் பாடிய பாடல்களில் ஆங்காங்கே அகச் சான்றாகக் குறித்திருத்தல் காணலாம். (தொடரும்)

அதிசயம் அநேகமுற்றபழநி(6)

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.

வரலாறு உணர்த்தும் மகத்துவம்

(3-ஆம் மலர் - 450-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழநி என்ற திருநாமத்தின் காரணம் பலவாகக் கூறப்படினும், பழத்தால் பழநிப் பெயர் பெறுமென்பது ஏனையவற்றைவிடப் பொருந்துவது போலக் காண்கிறது. பழநியும் பஞ்சாமிர்தமும் எப்போதும் சேர்த்தெண்ணப் படுவதும் அன்பர்கள் சிந்திக்கத் தக்கது. ஆதலின் பழத் தொடர்பு கூறும் வரலாறு உணர்த்தும் தத்துவம் யாதெனச் சற்று நோக்குவாம்.

நவலோகங் கடந்து உலக நாயகமாய் மிளிரும் சிவ லோகத்தில் சிவதரிசனஞ் செய்யச் சென்ற நாரதர் ஒரு கனியைக் காணிக்கையாகக் கொண்டு போனார். இறைவன் திருமுன் செல்வோர் வெறுங்கையுடன் செல்லலாகாது என்பது விளங்குகிறது. ஆண்டவன் திருமுன்னும், ஆசிரியனையும்,

---

திருக்கச்சிப் பதிச் சோக்கப் பெருமானே
பிறப்புப்பற் றறச் செச்சைக் கழல்தாராய்.

அரசனையும், அருமை நண்பனையும், அரு நோயாளரையும், கர்ப்பிணிகளையும், குழந்தைகளையும் காணச் செல்வோர் ஏதேனும் கையுறையின்றிக் காணலாகாது என்பர்.

"தெய்வம், குரவன், அரசன் திருமுன்பு செல்வோர்
மெய்வந்த அன்னர் அருள்வேண்டி விரும்பெதேனும்
கைவந்த பெற்றுச் செலிஇக் காண்குவர்"

(குசேலோபாக்கியானம்)

என்றபடி, நாரதர் காணிக்கையாகக் கொடுத்த கனி 'மாதுளங் கனி.' இது கனி வகையில் ஓர் தனி வகையினது. இதன் மேலே மூடியுள்ள தோலும், சிந்திச் சிதறும் பூவும் பிஞ்சும், நன்கு பழுத்த பழமும் ஆகிய ஒவ்வொரு பகுதியும் மக்கட்குப் பயன்படும் சிறப்புடையது. இக்கனி, பித்த நீக்கம் செய்யும் பெருமருந்தென்று பேசுவர் மருத்துவ நூலோர். மாதுளங்கனியை மாதேவனடியருக்கு ஒப்பாக மதித்துக் கூறியதும் உண்டு. பித்தத்தை மாற்றும். உண்ணப் பேரின்பமாகும்; சிவனார் நிறம் போலச் செந்நிறம் கொண்டு திகழும்; புரை புரையாகக் கனியும் மணிகள் கொண்டது மாதுளை. அது போல மெய்யடியாரும் உலகத் திரிபுணர்ச்சி என்ற பித்தந் தெளிந்தவர். என்றும் பேரின்பானுபவமுடையவர். சிவ நெறியான செம்மை நலங் கனிந்தவர். இறையன்பினால் புரை புரை கனிந்த நன்மனம் கொண்டவர்கள். ஆதலால், மாதுளங் கனியும் மாதவர் மனமும் ஒற்றுமை கொண்டன என்பதை,

பித்தந் தெளிதலாற் பேரின்ப மாதலால்
அத்தரது செம்மையுமங் கார்தலால்—சித்தமு

மெய்வீடு பரம சுகசிந்து இந்திரிய
தரபா சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ.

புரைபுரையா கக்கனியும் பூமா துளையைப்
புரையறுமெய் யன்பரெனப் போற்று (தனிப் பாடல்)

எனக் கூறுவது காண்க. மாது + உளம் + கனி என்று பிரிக்க, அழகு (மிக்க) + மனமாகிய + கனி என்று பொருள் கண்டாருளர். இறையன்பிற் கனிந்த மனத்தையே காணிக்கையாக வைத்தனர் நாரதர் என்று கோடல் பொருந்தும்.

மாதுளங் கனிக்குப் பதில் மாங்கனி தந்தார் என்று கூறும் வரலாறும் உண்டு. என்னில், மா—சிறப்பு மூதலிய அனைத்தும் பெற்றுச் செம்மை நலம் கனிந்த உள்ளமே கனியாகத் தந்தனர் என்று கொள்க.

கனிந்த உள்ளத்தில் காட்சியளிப்பதே கடவுள் உருவான ஞானம் என்பர். வெறும் மாதுளங்கனி யாயின், வேண்டலும் வேண்டாமையுமற்ற சிவகுமரர்கள் அதனை விரும்பி யிருக்க மாட்டார்கள். உண்மையில், அக்கனி ஞானயாழ் முனிவரது நல்லன்பூறும் உள்ளத்தின் கனிவு. எனவே, உருகிக் கனிந்த உள்ளத்தைச் சிவத்தைப் போலவே சிவத்தின் வேறல்லாத சிவகுமரர்களும் வேண்டினர். மேலும் ஞானம் ஞானத்தையே விரும்பும். அது போல, ஞான தொப்பையப்பனும் ஞான பண்டித சுவாமி யும் ஞானக் கனியையே நயந்தனர்.

உயர்ந்த பொருளை அடைதற்கு ஒருவர் சலியாது உழைத்துப் பெறுவதே மரபு. உழைப்பின்றிப் பெற்ற பொருள் எத்துணை உயர்ந்த தென்றாலும் உரிய மதிப்பைப் பெறுவதில்லை. இதனை நோக்கியே, "யாழ் முனிவரது அன்பினில் விளைந்த ஆரமுதக் கனியை அடை

நின்னை புணர்ந்துரு கிப்போற் பதமக் கழல் சேர்வார்
தங்கு புரத்தினி லென்னையு மன்போடு வைக்கச் சற்றுக்கருதாதோ

வோர், உலகை ஒரு நொடியில் வலம் வந்தே பெற வேண்டும்'' என்றது சிவத்தின் தீர்வையாயிற்று. இது உலகினுள்ளார்க் கெல்லாம் ஒழுகக் காட்டிய உயர்நெறியாகும். தந்தையானவன், தன்னிடத்தமைந்த நற்பொருளை, அதன் பெருமையைத் பேருழைப்பாலறிந்த பின்னரே மகனுக்கு வழங்குதல் வேண்டும். இல்லையேல், பொன்னின் பெருமதிப்பு உணராப் பேதையான குழந்தையின் கையில், பொற் கிண்ணம் தந்தாற்போலப் பயனின்றி அழியும். மாற்றறியாத செழும் பசும் பொன்னாகிய மகாதேவரைப் பொற் கிண்ணமாகவும், பெருமான் பெருங் கருணைப் பெருமையுணராத பேதையாகிய தன்னைக் குழந்தையாகவும் கூறிக்கொண்டு, குழந்தை கையிலிருந்த பொற் கிண்ணம், தனக்குரிய மதிப்பைப் பெறுத தன்மை போல, தன்னிடம் குடி கொண்ட இறைவனுக்கும் தன்னால் ஒரு சிறப்பும் சாரவில்லை என்ற கருத்துப்பட

"மழக்கை யிலங்கு பொற்கிண்ண மாயினை"

எனக் கூறும் மணிவாசகத்தை உன்னுக.

உழைத்துப் பெற்ற ஊதியமும், உழந்துண்ட பேரான கமுமே சாலச்சிறக்குமாகலின், சிவனார் கட்டளை அங்ஙனம் நிகழ்ந்தது. அக்கனி ஞானம் என்று காட்டவே அதனை ஒருவர்க்கே தர உன்னினர் சிவனார். ஞானத்தை இரண்டாகப் பகுக்க ஒண்ணுமோ? ஒண்ணுமேல் சிவனார் அக்கனியைச் சிறுவ ரிருவருக்கும் பகிர்ந்திருப்பாரல்லவா?

சிவத்தின் செயலிங்ஙனமாக, வேலண்ணல் விளையாட்டின் உண்மையை விளக்குவாம். தூவியம் பசுந்தோகை மேனிவர்ந்து மண்ணிலகு புக்க மயில்வீரன் கீழ் ஏழுலகை

உருகுமுரிமை காட்டிய முருகனெனவு நாக்கொடு
உனது கழல்கள் போற்றிட அருள் தாராய்.

யும், மேலேழ் உலகையும், ஏழு கடல்களையும், ஏழு மலைகளையும் மண் முதல் ஐம்பெரும் பூதங்களிலுள்ள ஆயிரக் கணக்கான அண்டங்களையும், சகல புவனங்களையும் ஒரு கொடியில் வலஞ் செய்தனன்.

"—ஒரு கொம்பினிலே
எழுதென மொழியப் பண்டுபாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக்குன்று தாதையை—யன்றுசூழ
வலம்வரு மளவில் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டிசாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண—முண்டுலாவு
மரகத கலபச் செம்புள்வாகன
மிசைவரு முருகச் சிம்புளே"

(திருப்புகழ்)

"செகமுழுது முன்புதும்பி முகவனொடு தந்தைமுன்பு
திகிரி வலம்வந்த செம்பொன்—மயில்வீர"

(திருப்புகழ்)

கந்தவேள் இக்கனி காரணமாக விளக்க எண்ணிய வேறொருண்மையுமுண்டு. ஒருகால் தேவர் முதல் பதினெண் கணத்தவரும் ஒரு மாநாடு கூட்டினர். அதில் பல்வேறு பொருள்பற்றி, ஆராய்ந்து முடிவு கட்டினர். அப்போது உலகில் 'பரப்பிரமம் — பெரிய பதிப் பொருள்' ஆவார் யாவர்? என வாதித்து, மண் முதல் நாதமீறுயுள்ள அண்டங்களனைத்தையும் ஒரே நாளில் வலம்வரு மவனையே பதிப் பொருள் என அறுதியிட் டுரைத்தனர். அத்தகைய

பக்தியுடனுருகி நித்த முனதடிகள்
பற்று மருள் தருள்வாயே.

பதிப்பொருள் தானே என்று நிலைநிறுத்தத் தக்க சமயம் பார்த்த சண்முகன், கனி காரணமாய் அகிலதலம் ஓடி வருமாறு அடல்மயில் நடாவினன். நவலோகங்களும் கைதொழு நிச தேவனும், பதினாலுலகந் தொழுதேத்தும் பரமபதியுமான நங்குகப் பரனுக்கு இஃது ஓர் அரிய காரிய மன்று. பதிப்பொருள் ஒருவனே. அவனுக்கு அசைவில்லை; அவன் மனோவேகத்திலும் சாலவிரைவுடன் செல்வான். ஐம்பொறிகளைவிட அதிவேகமுடைய இவனை, ஐம்பொறிகளில் எதுவும் அடைய இயலாது. அவன் (அசையாது) நிலைத்திருந்தும் கடுவேகமுடைய மன முதலிய கருவிகளையும் கடந்து செல்வன். காற்று அவனிடமிருந்தே உயிர்கட்குச் சலனத்தை உண்டுபண்ணுகிறது என்று பொருள்படும்:--

" அநேஜ தேகம் மநஸோ ஜவீயோநை
நத் தேவா ஆப்நுவன் பூர்வமர்ஷத்!
தத்தாவ தோந்யா நத்யேதிதிஷ்டத்
தஸ்மிந் நபோமாத ரிச்வாத தாதி "!

ஈசோப நிடதங் கூறும் பதியிலக்கணத்திற்குரிய

அதிவேக பதியாவான் அறுமுகனே என்று விளங்குறதல்லவா?

மயிலேறும் மன்னன் போலவே, ஞானவிநாயக நம்பனும் நமக்கு அறிவுறுத்திய உண்மை அவனது ஆடலினது. தந்தி முகத்தெந்தை "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்ற உண்மையை உணர்த்தவே, எவ்வுலகும் தோன்றி ஒடுங்கு நிலையமான தன் பெற்றோரை வலம்

கொடியனேனை யோதர்தரு தலையேனை நாடாத
குருடனேனை நீயாழ்வ தோருநாளே.

கொண்டு கனியுங் கொண்டனன். பிள்ளையார் என்ற தன் பெயருக் கேற்ப, பிள்ளைகள் பெற்ரோரிடம் கொள்ளும் மதிப்பையும் விளக்கினன் என்க. பிள்ளைகட்கு எல்லா உலகமும் பெற்ரோரே. அவர்களே பிள்ளைகட்குத் தெய்வ மாவார் என்றே நீதி நூல்கள் கூறும்.

"மன்ற - புதல்வர்க்குத் (தெய்வம்) தந்தையும் தாயும்"
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்ற வாக்குகளை உன்னுக.

இவ்வுண்மை, நூலறி புலவனை குமாரபிரான் அறியாததன்று. ஆயினும் ஒருண்மை தன்னுலும், பிறிதோருண்மை தன் தமையனுலும் உலகிற்கு உணர்த்த எண்ணிய சிவனர் திருவுள்ளக் குறிப்பின்படி நடந்தனன் என்றறிக. மாதுளங் கனியான சிவஞானத் தீங் கனியாவான் செவ்வேட் பரமனே என்று செகமறிந்திடச் செய்வதற்கே, சேயவனும் கனி பெருது கவன்ருன் போல நடித்து ஞானமலையை நண்ணினன். ஞானக்கனி ஞான மலையிலேயே தோன்று மாதலின்.

இதனையறிந்து அங்குச் சென்ற சிவனர் முருகனின் முனிவு மாற்றுவார்போல, "என்று பிள்ளை, அறிவுடையை, தேசுதரு நம் வாணுதல் கண்மணி நீ! சிறுவனே? பெரியை; வாசாறுமென் கனியுமொரு கனியோ? மதுர மொழி வாயால் பேச அரிய மறைஞானப் பிள்ளை பழநீ" எனப்புகன்ருர். இங்ஙனம் பழநிமலையுடன் பழநிமலன் கூறியதால் நம் ஞானநாதன் எழுந்தருளிய மலையும் பழநி மலையாயிற்று.

விசையான தோகை துங்க மயிலேறி யோடி வந்து
வெளி ஞான வீடுதந்து அருள்வாயே.

"அண்டர் நாயகன் மந்திரம் பிற அக்கரங்களை ஒக்குநேர்
தண்டபாணி இருக்கும் இம்மலை தரைவிலங்கலை ஒத்தன
தண்டபாணியை ஈசன் நீ பழமென்றதால் பழநிப்பெயர்
கொண்டதே வளவத் தலம் புகழ் கூறினேன் நெறி தேருளீர்"

[பாம்பனடிகள்]

இம்மலையின் திருநாமம், சிவனார் திருவாக்கால் தோன்றிய சிறப்பாலும், ஞானத்தின் இருப்பிடமாய், ஞானநாயகன் இருக்கையாய், ஞானம் விளைக்கும் நன்னிலமாய் விளங்குவதாலும், திருமந்திரமாய்த் திகழ்கிறது. மந்திரம் நினைத்ததை அருளவல்லது. ஆதலின், இத்திருநாமம், கற்கவும், கேட்கவும், நித்தம் உருவேற செபிக்கவும், அர்ச்சிக்கவும், எழுதிப் படிக்கவும் பயன் பெரிதாம். அங்ஙனம் படிக்க இயலாதவர் பழநித் திருநாமம் படிப்பவரைப் பத்தியுடன் வழிபடவும் பலன் அதிகம்கிடைக்கும்.

" படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாள் முடிக்கின்றிலை" என்றார் அருணகிரியார்.

இதனாலன்றோ நம்மவர் தம் மக்களுக்குப் பழநி என்று பேரிட்டு வழங்குவர். பழநித் திருநாமத்தைப் பல்கால் ஓதுவார்க்கு வரும் பயன்களைப் பின்வரும் பாடலிற் காண்க.

பழநி என்றிடப் பழவினை மாறும்
பழநி என்றிடப் பதியமு நூறும்
பழநி என்றிடப் பலநலஞ் சேரும்
பழநி என்றிடப் பரகதி தானே.

(தொடரும்)

வளமொடு செந்தமிழ் உரைசெய அன்பரு
மகிழ வரங்களும் அருள்வாயே.

வைத்தியநாதன்

கவியரசு வித்வான் கு. நடேச கவுண்டர்.

"பித்த உலகம் என்று இவ்வுலகுக்குப் பெயரிட்டார் மணிவாசகனார். நன்மையைக் கை விட்டுத் தீமையை மேற்கொள்வது இவ்வுலகத்தோர் இயற்கை. சித்தந் தெளிவில்லாமல் "வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி" முதலியவற்றையே கருதிச் "சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வு" மட்டுமேயன்றி, தகைமை சிவ ஞானம் முத்தி பரகதியும் அளிக்கும் இறைவனை அவமதித்துத் திரிவோரே இக்காலினிற் பலர். அவருட் சிலர் கடவுள் என்பதொன்று இல்லையென்பர். உண்டு எனத் தெருட்டியபோது, "அப்படியொன்று இருந்தால் இருக்கட்டும்; அதைப் பற்றி நமக்கென்ன கவலை?" என்பர். இவ்வாறு அவர்கள் கூறுவன பல. அவற்றுள் ஒன்று "கடவுள் நமக்குச் செய்தது என்ன?" என்பதாகும். அத்தகைய வினாவிற்கு விடை கூற இயலாது மயங்கும் அன்பர்களுக்குத் தெளிவு உண்டாகுமாறு ஈண்டுச் சில கூறுவாம்.

ஒரு பைத்தியக்காரன் விஷமும் உண்டு மூர்ச்சித்துக் கிடந்தான். கருணை மிக்க ஒரு வைத்தியன், முதலில் மூர்ச்சையை நீக்கி, பின் பைத்தியம் நீங்க மருத்துவம் செய்து, இறுதியில் விடத்தின் கொடுமை சிறிதும் அவனை வருத்தாமல் நீக்கி, இன்பமாய் வாழ வைத்தான். இவ்வாறு சிகிச்சை பெற்றவன், தானே அறிந்து தன் குறையைச் சொல்லி வேண்டிக் கொண்டானோ? எனில், இல்லை. மூர்ச்

தாவிளைகள் உற்று மேவிய பதத்தில்
'வாழ்வோடு சிறக்க அருள்வாயே.

சித்துக் கிடப்பவனுக்கு அறிவேது? செயலேது? வைத்தியன் தானே வலிந்து வந்து உதவினான். பெருநஞ்சால் மூர்ச்சித்தவனுக்கு வைத்தியன் மருத்துவத்தால் முதன் முதலாக, உடம்பைத் தொட்டால் அறியும் ஊறு (ஸ்பரிச) உணர்ச்சி தோன்றிற்று. படிப் படியாகச் சுவை, நாற்றம், பார்வை, ஒலி என்பவற்றையும் அறியும் ஆற்றல்கள் தோன்றின. எனினும் விடத்தின் வேகம் முழுவதும் நீங்காமையால் வைத்தியன் கொடுத்த மருந்தின் ஆற்றலுக்கு ஏற்பவே உணர்வு பெற்று - அடிக்கடி சிற்றளவாக வேனும் பேரளவாக வேனும் மூர்ச்சையுற்றே வந்தான். மூர்ச்சை நீங்கியுள்ள காலத்தில், அதாவது ஐயுணர்வும் பெற்று பின் தன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்த கருணை மருத்துவன் ஒருவன் உளன் என்பதை ராமல், தனக்கு மருத்துவம் நடைபெறுகின்ற சாலையும், ஆண்டுள்ள அனைவரும் அனைத்தும் அவனுடையனவே என்பதையும் உணராமல், தன் அறிவையும் ஆற்றலையும் ஆக்கவும் போக்கவும் வல்லவன் அந்த மருத்துவன் என்பதையும் உணராமல், தன் அறிவு ஆற்றலால் மருத்துவர் கூட்டத்தி லிருப்போர் அனைவரையும் அடக்கித் தானே ஆளலாமென்று செருக்குக்கொண்டு கூத்தாடத் தொடங்கினான். அதனைக் கண்ட அறிஞர்கள் அவனைப் பித்தன் என்று உணர்ந்து தக்கபடி நடந்து கொண்டனர். மருத்துவன் அந்தப் பித்தனை தக்கபடி விலங்கிட்டும், இனிப்பு மருந்து கசப்பு மருந்து முதலியன ஊட்டியும், இன்னும் பல் வகையாலும் பைத்தியந் தீர வைத்தியம் செய்து வந்தான். பல வகைச் சிகிச்சைகளின் பயனாலும் சிறிது

காலமுமுணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருள் என்று பெறுவேனே.

சிறிதாகப் பைத்தியமும் தீர்ந்தான். தன் மூர்ச்சையைத் தீர்த்த மருத்துவன் ஒருவன் இங்கே இருக்கின்றான் என்பதையும், கண்டுள்ளார் பலரும், தன் போல் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவனால் கொண்டு வந்து வைக்கப் பெற்றவர்களே என்றும், பைத்தியமும் விடமும் நீங்கி வீடு சென்றோர் எண்ணிலாதவர் என்றும் அறிந்து கொண்டான். மருத்துவச் சாலை, மருத்துவன், நோயாளி, சிகிச்சை முதலியவற்றைப் பற்றிய செய்திகளை உணர்த்தும் நூல்களும், அவற்றைக் கற்றறிந்தோர்களும், கற்றதோடு பயிற்சியும் (அநுபவமும்) பெற்ற துணை வைத்தியர்களும்; அவன் அறிவு பெறுவதற்குத் துணையாயினர்.

இவ்வாறு பித்தந் தெளிந்தவன், கைம்மாறு கருதாது தனக்கு இப்பேருதவி செய்த மருத்துவனைக் கண்டு வணங்க விரும்பினான். முயன்றான். கண்டான். அந்த மருத்துவன், இவன் கொண்டிருந்த மூர்ச்சை நீக்குதல் முதலிய உதவி செய்தவன் தானே என்பதை உணர்த்தினான். மருத்துவன் காலில் விழுந்து வணங்கினான் நோயாளி. "ஐயனே என்னை வருத்துகின்ற இப் பைத்தியமும், மூர்ச்சையும் இனி என்றென்றைக்கும் என்னை அணுகாதபடி அருள் செய்க" என்று வேண்டினான்.

மருத்துவனும் நோயாளியின் பக்குவத்தை யறிந்து தக்க மருந்து கொடுத்தான். மருந்து பயன் படுதற்குப் பத்தியமும் சொன்னான். பத்தியம் தவறாம லிருப்பதற்காக மேற்பார்வையாளர் கூட்டத்திலும் கூட்டினான். மருந்தோடு, மந்திரமும் மணியும் கொடுத்தான். இந்த மணியை யணிந்து மந்திரத்தை யோதி என்னை மறவாமல்

ஒருகால் முருகா பரமா குமரா
உயர்கா வெனவோத அருள் தாராய்.

கினைத்திரு. பைத்தியமும் அணுகாது. மூர்ச்சையும் ஏற்படாது என்றான். அவ்வாறே அநுட்டித்து மேன்மை பெற்றான் அவன்.

சண்டுப் பைத்தியக்காரனுக்கு வைத்தியன் செய்தது போன்றதே கடவுள் நமக்குச் செய்யும் உதவி. நாம் யார்? ஆன்மாக்கள். ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகமுடையது என்பது பொருள். ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் வியாபியாதபடி, சகசமாய், உடன் கலந்து நின்று, (உடல் முழுதும் விடம் பரவியது போல,) அதனை அணுவாக்கியது ஆணவ மலம். அதுவே, இருள், தமசு, அவிச்சை முதலிய வேறு பெயர்களாலும் கூறப்படும். ஆணவ மலத்தால் அறிவு விளக்கம் இல்லாமல் (கல்போல்), மூர்ச்சையுற்று ஆன்மா கிடக்கும். அம் மூர்ச்சை நீங்குவதற்காகக் கடவுள் ஆன்மாவிற்கு கலையாதி வித்தியா தத்துவங்களைக் கூட்டி, ஆன்மாவின் சத்திகளை எழுப்புகின்றான். மண் முதலாகக் கூறப்படும் ஆன்ம தத்துவ உடலால், அறிவு இச்சை செயல்கள் தொழிற்படத் தொடங்குகின்றன. ஆணவ மூர்ச்சை சற்றே விலகி, உடலில் உள்ள இந்திரியங்கள் முதலியவற்றோடு கூடி விஷயங்களை அறியுங்கால், பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மயங்கியறிதல் முதலியவற்றால், ஆன்மா பைத்தியக்காரன் போன்றதாகும். இவ்வாறு ஆணவ இருளில் அறிவு செயலின்றிக் கிடந்த ஆன்மாவுக்கு, கருணையால் அறிவுத் தெளிவு சிறிது உண்டாகச் செய்தானன்றோ கடவுள்? அத்தோடு அமையாமல், உடலையும் கரணங்களையும் கொடுத்துப் போக நுகரச் செய்த

அறிய அரிய அறியாத அடிகள்அறிய அடியேனும்
அறிவுள் அறியும் அறிவூற அருள்வாயே.

வன் யார்? கடவுளேயன்றோ? அந்தப் போகங்களை நுகர்தற்குரிய உலகங்களைப் படைத்தவன் யார்? கடவுளேயன்றோ? உலகமே அந்தக் கடவுள் வைத்தியனது மருத்துவக்கூடம். தனுகரண புவன போகங்களை யளித்தலே மூர்ச்சை நீங்கச் செய்யும் சிகிச்சை. ஓரறிவு முதலாக ஆறறிவை உயிர்கள் அடைதலே சிறிது சிறிதாக மூர்ச்சை தெளிந்து அறிவு பெறுதல். உறக்கம் மரணம் என்பனவே ஆணவ நஞ்சால் உண்டாகும் சிறு மூர்ச்சையும் பெரு மூர்ச்சையும். ஆணவ பந்தமுற்ற உயிர் சுதந்தரமற்றது. தனுகரண புவன போகங்களைத் தானே தேடியடையும் ஆற்றல் இல்லாதது. சடமாகிய மாயையும், தானே வந்து தனுகரண முதலியனவாகச் சமைந்து ஆன்மாவை யடையாது என்பனவற்றை யறியாமல், "தினைத்தனையோர் பொறையிலா உயிர் போங் கூட்டைப் பொருள் என்று மிக நினைந்து மதியால் இந்த அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும் ஆங்காரமே பைத்தியக்காரத்தனம். புண்ணிய பாவங்களே பைத்தியக்காரனுக்கு இடும் இருவகை விலங்குகள். மோட்சப் பேறு எய்திய ஆன்மாக்களே முழுதும் நீங்கப் பெற்றோர். வேதாகமங்களும் அவற்றைத் தழுவிய மெய்ஞ்ஞான நூல்களுமே வைத்திய சாஸ்திரங்கள். அவற்றைக் கற்று வல்லராய், உளந்தூயராய்ப் போதிப்பார்களே மருத்துவ நிலையத்து அலுவலாளர்கள். அறத்தைச் செய்வதும் பாவத்தை விடுதலுமே பத்தியம். இத்தனை ஏற்பாடுகளும் செய்து பைத்தியத்துக்குச் சிகிச்சை செய்யும் கடவுளது பரம காருண்ணியத்தை மறப்பதும் பெரும்பாதகம் அன்றோ?

பித்தந் தெளிதல், மெய்யுணர்ந்து இறைவனை நாடுதல். ஆசிரிய வடிவாய் இறைவன் எழுந்தருளி உபதேசிக்கும் ஞானமே. விடந் தீர்க்கும் நன் மருந்து. திருநீறு, அம்

மருந்திற்கு ஒரு அநுபானம். திருவைந்தெழுத்து, ஆறெழுத்து, பிரணவம் முதலியனவே மந்திரங்கள். உருத்திராட்சமே மணி. சரியை முதலிய தவநெறி நிற்றலே பத்தியம். ஆணவ விடவேகம் அடங்கி, நம் செயலற்று, நான் அற்ற நிலையே விஷ நீக்கம். இறைவன் திருவடித் தாமரையில் ஊறும் பேரின்பத் தேனை நுகர்ந்து, "இருவினையும் மலமும் அற இறவியொடு பிறவியற ஏகபோகமாய்த் தான் அவனாகி நிற்கும் நிலையே பேரின்பமாகும்;" அவன் அருள் இன்றி அந்த நிலையை அடைய முடியாது. இவ்வாறு ஆணவ விட மூர்ச்சையையும் மாயாமலப் பித்தத்தையும் நீக்கிப் பேரின்ப வீடு அளித்தலே கடவுள் நமக்குச் செய்யும் உபகாரமாம்.

ஆகையால், அன்பர்களே!

"நிலையாத சமுத்திரமான சமுசார துறைக்கணின் மூழ்கி—
பவநோயின் அலைப் பலவேகிச்
சலமான பயித்தியமாகித் தடுமாறித் தவியாமல்,
பவரோக வைத்தியநாதப் பெருமானே!
தலமீது பிழைத்திடவே நின் அருள் தாராய்"

என்று போற்றி உய்வோமாக.

"ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

BHAKTI

THE ROYAL ROAD

Of all the expedients to attain to the establishment of the kingdom of God within oneself the easiest and most unfailing is Bhakthi or Love of God. In the Bhagavad Gita Lord Sri Krishna declared that by exclusive devotion to Him, He can be "truly *known*, *seen* and *entered into*."

of all living beings and unshakable faith in Lord and above all a fixed determination to reach Him as the very goal of life, man settles for himself that atmosphere where the Lord's mercy is had in abundance and without fail. The Lord declared that He will set the mind of the bhakta in form and manner to enable him to reach the ultimate deliverance. So the Lord spoke. But remember that the Lord who spoke through the veda, the Sastra and the Gita has not become speechless. He speaks still through the Bhaktas in the still small voice of Silence or Mowna. Hence the Lord described Bhakti as conferring sweetness on human life and at the same time providing for immortality. Saint Arunagiri said "the life of Bhakti is Mukti and Mukti isMurga."Religious and denominational disputations do not serve the purpose. We are warned against participation in them. The loving heart and the contemplative attachment to the Lord whom he sees in all living being, mark out the identity of the Bhakta as distingudished from other men. ***For a time Bhakta is but a human editon of God.*** Nothing is more fruitful of realisation than the unremittant contemplation and chanting of the Lord's Great Names.

Sri Skandaya Nama Aum !
Sri Ramaya Nama Aum !
Sri Krishnaya Nama Aum !
Sri Brahma Swarupaya Nama Aum !

(***Thiruppugal Mani***)

Regd. No. M.5390. Amirthavachani (1952 சித்திரை-அமிர்தவசனி)

52-

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்

புரொப்ரைட்டர்:
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras.